Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி: எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 12 ஆம் நாள் துல்கஃதா 10 (25-3-64) புதன்கிழமை இதழ் 44

ஈழநாடு
சந்தா விபரம்

| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| --- | --- | --- |
| 1 வருடம் | 48-00 | 1-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# யோகசுவாமிகளுக்கு அஞ்சலி

## இன்று பூதவுடல் தகனம்

### திரைப்படக்காட்சி ரத்து; கல்லூரிகள் மூடப்படும்

யாழ்ப்பாணம், புதன்

நேற்று அதிகாலை சிவபதமடைந்த யாழ்ப்பாணத்தின் தவயோகி, யோக சுவாமிகளுக்கு நேற்று அதிகாலை தொடக்கம் நள்ளிரவுக்குப் பின்னரும்கூட பெருந்தொகையான மக்கள் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தவயோகி சிவபதமடைந்த செய்தியை அறிந்து யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலிருந்தும் கொழும்பு மற்றும் வெளியூர்களிலிருந்தும் ஏராளமானோர் கொழும்புத்துறைக்கு வந்து குவிந்தனர்.

யோகசுவாமிகளின் பூதவுடல் இன்று புதன்கிழமை காலை 8 மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம், மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ். மத்திய கல்லூரி, மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளும் இன்று மூடப்பட்டிருக்கும். நேற்றிரவு யாழ்ப்பாணத்திலுள்ள திரைப் படமாளிகைகளில் படக்காட்சிகள் நடைபெறவில்லை.



## அடியை எஞ்ஞான்றும் அடைநெஞ்சமே

(பண்டித வித்துவான் க. கி. நடராஜன் B. O. L. அவர்கள்)

கட்டளைக் கலித்துறை

1. சீரா ரிலங்கையிற் சேர்தரும் அண்ணலைச் செந்தமிழ்சேர்
ஊரா மியாழ்நகர்க் கோர்பெருங் காவலை உய்யுநெறி
வாரா தவர்க்கும் வழிகாட்டி யாள்யோட் வள்ளலையே
ஓரா வுளங்கரைந் துள்கியெஞ் ஞான்றும் உரைநெஞ்சமே

2. இருள்வழி யிர்த்திடுந் துன்பப் படலம் எழில் மறைத்துப்
பொருள்வழி காட்டுமெய்ஞ் ஞானத் திருவிழி போயிழந்த
குருடரும் நெஞ்சங் குழையவைத் தாளுங் குருமணியாம்
அருளுரு வாயவெம் மப்பனை யென்றும் அடைநெஞ்சமே

3. வாழ்த்த வெனக்கருள் வாரம்வைத் தாண்ட மலர்ப்பதத்தைப்
பாழ்த்தவென் சிந்தை பதியச்செய் தாலன்றிப் பாதகன்யான்
சூழ்த்துநின் றென்றுந் தொழுதுய்வ னோவின்பத் தொல்கடலின்
ஆழ்த்தும் பெருமான் அடியையெஞ் ஞான்றும் அடைநெஞ்சமே

4. இரும்பினைக் காந்தம் இழுக்கின்ற வாறென்னை யீர்த்தருளத்
திரும்பிவே றொன்றையும் பார்க்கவொட்டாமல் திருவடியாங்
கரும்பினை யீங்தென்றன் கண்ணிணை யென்றுங் கலுழுகண்ணீர்
அரும்பச் செய் தாண்ட அடிகளின் பாதம் அடைநெஞ்சமே

5. பித்தரும் பாநின்ற நெஞ்சனை வஞ்சனைப் பேருலகோர்
கைத்தரும் பாவி யெனுங்கடை யேனைக் கடைக் கணித்தான்
முத்தரும் பாரிலுள் ளோருந் தொழுங்கொழும் புத்துறையின்
அத்தனை யோக அடிகளைப் பாதம் அடைநெஞ்சமே

6. நரைத்த சடையும் நளின மலர்மேல் நயனங்களும்
சிரித்த விதழுந் திருமுகச் செவ்வியுஞ் சீரருளும்
விரித்த உரம்பொலி மேனியில் வீசும் விரைநலனும்
திருத்திக ழும்மலர்ப் பாதமுஞ் சிந்தித் திருநெஞ்சமே

### கடைகள் மூடப்படும்

ஈழத் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ யோக சுவாமிக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு இன்று வர்த்தகநிலையங்களும் தொழில் ஸ்தாபனங்களும் மூடப்படும்.

## தெய்வீக வாழ்க்கை

யோகசுவாமிகளின் மறைவு குறித்து செனட்டர் சு. நடேசபிள்ளை விடுத்த இரங்கற் செய்தி வருமாறு:

யோகசுவாமிகள் தெய்வீக வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். உலக அனுபவத்தைக் கடந்த தெய்வானுபவம் ஒன்று உண்டென்பதை அவர்கள் வாயிலாகப் பலரும் அறியக்கூடியதாக இருந்தது. அவர்கள் ஒரு சிவஞானியாக வாழ்ந்தார்கள். உலகப் பற்றற்ற உன்னத நிலையை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். அவர்கள அருள்வாக்கைப் பெற்றிருந்தார்கள். "நற்சிந்தனை" என்று அவர்கள் அருளிய நூல் இதற்குச் சான்றாகும்.

"கற்றோர் யாவதும் அறியா அறிவினர்
கற்றோர்க்குத் தாம் வரம் பாகிய காட்சியர்"

என்ற முனிவரர் இலக்கணம் அவர்களிடம் பொருந்தியிருந்தது. அவர்களைச் சார்ந்து வாழ்க்கையில் மலர்ச்சியடைந்தவர்கள் பலர். அவர்களுடைய அடியார்களால் யாழ்ப்பாணத்தில் நிலைநாட்டப்பட்ட சிவதொண்டன் நிலையம் நீடு வாழ்க.

## ஞான விளக்கு அணைந்தது

— கண்ணப்பன் —

யாழ்ப்பாண நகரின் கிழக்கில் வதிந்து குடாநாடு முழுமைக்கும் பிரகாசித்த ஞாயிறு போன்ற பெருவிளக்கு அணைந்தது. யோக சுவாமிகள் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாண மக்களின் திவ்ய ஜீவிய ஞான குருவாய்த் திகழ்ந்தார். அவரது மறைவினால் எங்கள் நாடு தேடொணாத செல்வத்தை இழந்தது.

இந்நாட்டின் செல்வத்தில் அரும்பெரும் செல்வமாக ஒரு ஞானகுரு பரம்பரை சில நூற்றாண்டுகளாக இருந்துவந்தது. இவர்களின் தீவிரச் செந்நெறிகளும் அளவற்ற வைராக்கியமும் உன்னத சிவானுபூதியும் இக்குரு பரம்பரையில் வாழையடி வாழையாக வழித்தோன்றி வந்தன. இவர்கள் சாதாரண சாதுக்கள் போல் சரியை, கிரியை யோக வழிபாட்டில் நெடுங்காலம் வருந்தி அனுபவம் பெற்றவர்களல்ல. இவர்கள் தீவிர ஞானமார்க்கத்தில் இமைப்பொழுதில் குருவின் கருணை நோக்கால் கன்ம வாழ்வு ஒழித்து இறைவன் அநுபூதி பெற்று ஜீவன்முக்தர்களானவர்கள்;

பித்தர் போல் வேடம்பூண்ட உண்மைப் பிரமஞானி செல்லப்பா சுவாமிகள் தம் கருணை காட்டி அழைத்த மாத்திரத்திலேயே யோகர் சுவாமிகள் உள்ளம் திறந்து பிரமஞானியானார். யோகர் சுவாமிகளும் அவரது ஞானத் தோழர்களும்

(8-ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

நீர்வேலி கந்தசுவாமி கோவில் திருப்பணிநிதிக்குரிய ரிக்கற்றுகள் விற்பனவு செய்வதற்குப் பெற்றுக்கொண்டவர்கள் ரிக்கற் கட்டைகளையும் பணத்தையும் காரியதரிசிக்கு உடனே அனுப்பி வைக்கும்படி கேட்கின்றேன்.

சி, க. அருணசலம், காரியதரிசி.
125

## வரி விளம்பரம்

உயர்ந்த தரம்! உன்னத மணம்! கம்ஸாஸ் செந்தாமரை பத்திகளை வாங்கிப் பாவியுங்கள், எங்கும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர் நாதன் ஸ்ரோர்ஸ், 105, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 51

### தேவை

தென்னந்தோட்டத்தில் வேலைசெய்வதற்கு சைவசமய ஆள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் மனுச்செய்யவும்.

விலாசம்: க. சி. ஆறுமுகம், ஆயிலி, காரைநகர். 54

### றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. கலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பபணம்.

### உள்நாட்டுத் தயாரிப்புகள்

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை. வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்பதற்காக வாங்குங்கள் என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம். அளவெட்டி. 1947

### விற்பனைக்கு

நல்லமுறையில் மின்சாரத்தினால் இயங்கக்கூடிய டிஸ்ரில் வாட்டர் வடிக்கும் யந்திரம் ஒன்று விற்பனைக்கு உண்டு. நேரில் விசாரிக்கவும் விலாசம்: நாஷனல் எலக்ரிக்கல்ஸ், கே. கே. எஸ். வீதி, கொக்குவில். 70

### விற்பனைக்கு

EY 6680 தொடர் இலக்கமுடைய (B. S. A., 2·5 H. P.) மோட்டார் சயிக்கிள் நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடலாம். M. S. சுந்தரலிங்கம், C/o V M. கார்த்திகேசு, சுதுமலை வடக்கு, மானிப்பாய். 71

## எம். ஜே. தேசாய்

புதுடில்லி, மார்ச். 24

இந்திய வெளிநாட்டுக் காரியதரிசி திரு. எம். ஜே. தேசாய் ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கிறார். லண்டன், பாரிஸ், பிரேக், மாஸ்கோ ஆகிய நகரங்களுக்கும் அவர் செல்வார். காஷ்மீர் பற்றியும், சீன-பாரத எல்லை பற்றியும் அவர் தாம் போகுமிடங்களில் விளக்கிக் கூறுவார்.

## வானொலிநிகழ்ச்சிகள்

### புதன் 25-3-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியசிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம்.

இரவு 7-15 பேச்சு — தசாவதானம் கதிரவேற்பிள்ளை, கே. அம்பலவாணபிள்ளை, 7-30 வயலின் — கே. பாக்கியராஜா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உங்கள் பிரச்சினைகள், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 மணித்திருநாடு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 டி. பி. ராமகிருஷ்ணன் — பாட்டு.

மாலை 5-15 ஜி ரெங்கராஜன், விமலா வேங்கடராமன் — வீணை, 5-45 ஆகாஷ்வாணி ஒலிப்பதிவுகள், 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-45 இதயக்கரையில் நாடகம் — சுகி சுப்பிரமணியன் எழுதியது, 8-30 கோட்டுவாத்தியம். 8-45 குரல் இசை, 9-45 இசைமாலை, 10-00 ஜி. ரெங்கராஜன், விமலா வேங்கடராமன் — வீணை.

## தந்தையிடம் தனயன் திருட்டு

காங்கேசன்துறை, செவ்வாய்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவரத்தினம் (13) என்பவர் தமது தந்தை எஸ். கனகரத்தினம் என்பவரிடமிருந்து ரூ. 1050ரொக்கப்பணத்தையும் கைக்கடிகாரமொன்றையும் திருடிச்சென்று தந்தையாரிடமிருந்து பிரிந்திருப்பதாகக் கூறப்படும் தமது தாயிடம் கொடுத்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸதிரேட் திரு. ஜி. எப். ஏச். அத்துறுபாறு முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். மாஜிஸ்திரேட் தீர்ப்பை அடுத்த மாதம் 10-ம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார்.

## ஏழைப்பிள்ளைகட்கு இலவச புத்தகம்

நல்லூர், புதன்

சுன்னாகம் பட்டின சபை எல்லைக்குள்ளிருக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு தேவையான புத்தகங்கள் வாங்கிக் கொடுப்பதென பட்டினசபை முடிவு செய்துள்ளது. இதற்காக ஆயிரம் ரூபாய் பட்டினசபை வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்குவ தனவும் தீர்மானிக்கப்பட்டது.

பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பட்டினசபை எல்லைக்குள் உள்ள 11 பாடசாலைகளிலும் ஐந்தாம் வகுப்புக்குக் கீழ் படிக்கும் ஏழைப்பிள்ளைகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் புத்தகம் வாங்கிக் கொடுப்பதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# "போதுமான சைவஸ்தாபனங்கள் நம்மிடையே இல்லை"

## மலேஷிய சைவத் தலைவர் திரு. இராமநாதன் கருத்து

நல்லூர், புதன்

'இன்று பிற மதத்தில் உள்ளதுபோல சைவமக்களது தொகைக்குத் தக்க சமய ஸ்தாபனங்கள் இல்லை. சமய ஒழுக்கமுடையோர் அருகிவிட்டனர். விரல் விட்டு எண்ணக்கூடிய இவர்களிலும் பலர் தம்மை பிறர் மதிக்கவேண்டும் என்பதற்காக ஒழுக்கமுடையவர்கள் போல நடிக்கிறார்கள். தம்மைத்தாமே கனம் பண்ண முயல்பவராலும் அவர்களைப் பின்பற்றுபவராலும் சமயவளர்ச்சி, அறிவு, ஒழுக்கங்கள் தடைபடுகின்றன' என்று மலேசிய சைவ சித்தாந்தக் கழகத் தலைவர் திரு. கா. இராமநாதன் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றபேசுகையில் கூறினார்.

சைவ பரிபாலனசபை ஆதரவில் முடிக்குரிய நியாயவாதி திரு. தி. முத்துசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. இராமநாதன் தொடர்ந்து பேசியதாவது:

மலேசியா நாட்டுமக்களுக்குக் கிடையாத சமய சுதந்திரம் இந்நாட்டு மக்களிடையேயிருப்பதை நான் காண முடிகிறது. இங்குள்ள இந்துக்கல்லூரிகள் சைவசமயத்தையே கைக்கொண்டு ஒழுகி வருகின்றன என்னும் உண்மை மாணவர்களது சைவ அறிவைக் கொண்டு உணர முடிகிறது. ஆயினும் சைவ ஒழுக்கமே அறிவினும் சிறப்புற அமைய வேண்டும். அவ்வொழுக்கமும் ஒழுகிக் காட்டுவாரின்றி யாருக்கும் அமையாது.

பழைய காலத்தில் சைவ ஒழுக்கம் சிறந்து விளங்கியது சைவ ஒழுக்கவரலாறுகளுக்கு நாயன்மார்கள் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். அறிவுரை பகருவதிலும் பார்க்க சேவை செய்வது அவர்களது பெரு நோக்கமாயமைந்தது. மக்கள் நல்வழியிலே ஒழுகி ஈடேறுவதற்குத தடையானவற்றை நீக்கி உதவுவதே சேவை என்பதாகும்.

திருநாவுக்கரசர் வீதி பெருக்கியதும் சுந்தரர், நெல்லுப் பெற்றுதவியதும், அப்பர், சம்பந்தரிருவரும் படிக்காசு பெற்றீந்ததும் இன்னொரன்ன பிறவும் சைவமக்களுக்குத் திரிகரணசுத்தியோடு செய்தபெருஞ் சேவையேயாகும்.

தன்னறிவுபெரிதென்று எண்ணிச் சமயஞ் சொல்பவனிடம் நல்லொழுக்க மிராது; அவனிடம் சமயங் கேட்டல் கூடாது.

சமய அபிவிருத்தி செய்யும் பணியில் ஈடுபடுவதற்கு அநுபவத்தாலும் வயதாலும் முதிர்ந்த பெரியோர்களே உகந்தவர்கள். அவர்கள் குடும்ப பாரத்தினின்றும் நீங்கியவர்களாய்ப் பரிபூரண தொண்டாற்றத் தக்கவராவர். 'வம்பிற் கனிந்தகனி,' 'பிஞ்சிலே பழுத்த பழம்' உதவாது; முற்றக்கனிய வேண்டும். கனிந்த அக்கனியும் தானிருந்த கொடியிலோ செடியிலோ மேலும் இராது, அதற்கும் உதவாது; அதனைவிட்டு நீங்கிப் பிறருக்கே யுதவும், இக்கனிபோன்றவர்களே சமயாநுபவத்தாலும் வயதாலும் முதிர்ந்த பெரியார்கள். ஆதலால் அவர்களே சமயக் கல்வி ஒழுக்க விருத்திகளில் ஈடுபடவேண்டிய இற்றை நிலைக்கு ஏற்றதாகும்.

இந்நாட்டில் சமய அறிவை விருத்தி செய்வதற்குச் சிறந்த கழகங்களும் இருக்கின்றன. 50, 60 பேர் அடங்கிய சைவப் புலவர் கழகம் ஒன்று நல்ல முறையில் இயங்கிவருவதாக அறிகிறேன். சைவசித்தாந்த சமாஜம் அவர்களை வழிப்படுத்துகிறது; அவர்கள் நிரம்பப் படித்தவர்கள்; சமயந்தெரிந்தவர்கள். அவர்களது சேவை இந்நாட்டிற்கு என்றென்றும் தேவை. மேன்மேலும் தம்பணியை உயர்ந்த நோக்கத்தோடு செய்யவேண்டும்.

சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## இளைஞன் தற்கொலை

உடுப்பிட்டி, செவ்

உடுப்பிட்டி வீரபத்திர கோவிலடியில் வசிக்கும் பாஸ்கரன் (வயது 30) என்பவர் கிருமிநாசினி அருந்தி மரணமானார்.

20 வயதுள்ள இளம் மனைவியையும் பெண் குழந்தையொன்றையுமுடைய இவர் மோட்டார் வான் சாரதியாவார். இவர் இறக்கும் தறுவாயில், "தனது மரணத்திற்குத்தானே பொறுப்பாளியென்றும் அது பற்றி வேறு எவரையும் விசாரித்துத் தொந்தரவு படுத்த வேண்டாமென்றும்" கடிதம் எழுதி வைத்திருந்தார்.

இப்பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சி. பி. இமாஜரத்தினம் இவரது மரணம் பற்றி விசாரணை செய்து 'தற்கொலை' எனத் தீர்ப்பளித்தார்.

## சைவ இளைஞர் மகாநாடு

நல்லூர், செவ்.

அகில இலங்கை சைவ இளைஞர் மத்திய மகாசபையின் வருடாந்த சைவமகாநாடு கீரிமலையில் நடைபெறவிருக்கின்றது. ஏப்ரல் மாதத்தில் இருதினங்கள் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் தேவார பண் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதென மகாசபை முடிவு செய்துள்ளது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்துப் படித்த வாலிபருக்கு கொழும்பில் வேலை கிடைக்கிறது. முதல் மாதச் சம்பளத்தில் ரூ. 150 தாய்க்கு அனுப்புகிறார். அன்புத்தாய் அப்பணத்தை மகனுக்கே திருப்பி அனுப்பச் சொல்லுகிறார்! சில மாதங்களில் மணியார்டர் அடியோடு நின்று, ஆயிரம் ரூபாய் அவசரமாக அனுப்பும்படி மகனிடமிருந்து கடிதம் வருகிறது. மகனுக்கு உடல் நலமில்லை என்று தாய்க்குக் கவலை. இதற்கிடையே, மகன் கூடாத நட்பினால் கெட்ட பழக்கங்கள் ஏற்பட்டு, முடிவில் மின்னல் தாக்கி, பார்வை இழக்கிறார். தாயும் மாமனும் கொழும்பு வந்து, மகனை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லுகின்றனர். பார்வை கிடைத்து, மகன் திருந்தி நல்வாழ்வு வாழ்கின்றாரென்பதே கதை.

நகைச்சுவையுடனே இக்காலத்துக்கேற்ற பல நல்ல படிப்பினைகளைப் போதிக்கின்றது இந்த நாடகம். பெண்களே பெண்வேடம் தாங்குவது நாடகத்துக்கு அழகு அளிக்கிறது. இந்த இன்ப நாடகம், தமிழ் நாடகக்கலை இங்கு நல்ல வளர்ச்சி அடைந்துவருவதற்கு நல்லதோர் அத்தாட்சியாகும்.

* * *

காணிலார் கருத்தில் வாரார்
திருத்தலார் பொருத்தலாகார்
ஏணிலார் இறப்பும் இல்லார்
பிறப்பிலார் துறக்கலாகார்
காணிலார் ஐவரோடும்
இட்டெனை விரவிவைத்தார்
ஆணலார் பெண்ணும் அல்லார்
அதிகைவீரட்டனாரே.
—திருநாவுக்கரசர்.

## இனக்கலகம்

புளோரிடா, மார்ச். 24

புளோரிடாவில் நேற்று ஏற்பட்ட இனக்கலவரத்தில் ஒரு நீக்ரோ பெண் சுட்டுக் கொல்லப்பட்டார். 3 குண்டுகள் வீசப்பட்டன. 200 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.


ப்ரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'ப்ரீடம்' மார்க் கற்பூரம் என்றே கேட்டு வாங்குங்கள்.

இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள், ப்ரீ லங்கா இன்டஸ்ட்ரீஸ். மினுவாங்கொட.

# 2 நீதிபதிகளை கைது செய்ய சபாநாயகர் உத்தரவு

## உத்தர பிரதேசத்தில் நீதி - நிர்வாக லடாய்

புதுடில்லி, மார்ச் 24

அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் இரு நீதிபதிகளைக் கைதுசெய்யும் சட்டசபையின் முடிவிற்கிணங்க, சபாநாயகர், அவர்களைக் கைது செய்யும் உத்தரவைப் பிறப்பித்தார். சட்டசபையின் முடிவை அமுலாக்குவதே தமது வேலை என சபாநாயகர் கூறினர்.

இது சம்பந்தமாக உத்தரப் பிரதேச மந்திரிசபை 3 மணி நேரம் கூடி ஆலோசனை நடத்தியது.

தலைமைநீதிபதி உட்பட அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் 28 நீதிபதிகளும் கூடி, சபாநாயகரின் உத்தரவை அமுல் நடத்தக் கூடாது என்ற இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கிறார்கள்.

இந்த நெருக்கடியைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க முடியும் எனப் பல வட்டாரங்கள் கருதுகின்றன. அட்வகேட் ஜெனரலின் ஆலோசனை கோரப்பட்டிருப்பதாயும், ஜனாதிபதி இதில் தலையீடு செய்யும் சாத்தியமும் ஒரு அம்சமாய் இருக்குமென்றும் கூறப்படுகிறது.

## நந்தாவின் வேண்டுகோள்

புதுடில்லி, மார்ச். 24

பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படுவது ஆத்திர மூட்டத்தக்கதாய் இருந்தபோதிலும், இந்திய மக்கள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும் என உள்நாட்டு மந்திரி திரு. குல்ஸாரி லால்நந்தா நேற்றிரவு ரேடியோமூலம் நிகழ்த்திய உரையில் கூறினர். பதிலுக்குப் பதில் நடவடிக்கையிலீடுபடுவது, நாட்டின் முன்னேற்றத்தைப் பாரதூரமாகப் பாதிக்கும் என்றும், வன்முறைச் செயல்களை ஒழிப்பதில் மக்கள் ஒத்துழைக்க முன்வந்தால், அரசாங்கம் பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்றும் நந்தா கூறினர்.

## பகவத்சிங்கிற்கு அஞ்சலி

புதுடில்லி, மார்ச் 24

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பலாத்காரப் புரட்சியில் ஈடுபட்டு, அதன் மூலம் தூக்கு மேடையைத் தழுவிய பாஞ்சாலச்சிங்கம் பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய வீரத்தியாகிகளின் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் சமாதிகளுக்குச் சென்று மலர்களை வைத்து மரியாதை செய்தனர்.

## மழையினால் விவசாயிகள் நஷ்டம்

கொழும்பு, செவ்.

3 தினங்கள் கடுமையாகப் பெய்த பெருமழையின் காரணமாக நூற்றுக்கணக்கான கிழக்கு மாகாண விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

## யுதாண்ட் கியானி சந்திப்பு

ஜெனிவா, மார்ச். 24

ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்டும், சைப்ரஸிலுள்ள ஐ. நா. தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கியானியும் நேற்று சைப்ராஸ் நிலைமைபற்றிப் பேசினர்.

## காளையருக்கு கன்னிகை பரிசு

ஹைதராபாத், மார்ச் 24,

ஆந்திர அரசாங்கத்தின் ஒரு இலாகாவில்பணியாற்றும் இரு ஆண் ஸ்டெனோகிராபர்களை ஒரு பெண் ஸ்டெனோகிராபர் இங்கு ஒரு பஸ் நிலையத்தில் தாக்கியதாகக் கூறப்படுகிறது. 23 வயதுள்ள அந்த யுவதி அந்த இரு யுவர்களின் தொந்தரவு பொறுக்காமல் இருவரையும் செருப்பினால் தாக்கியதாக பொலிஸாரிடம் தெரிவித்தார்.

## சிகானுக் யோசனை

நாங்பெங், மார்ச் 24

பிரான்ஸ், கம்போடியா, தென்வியட்னும், லாவோஸ் ஆகிய நாடுகள் கூடி, பின் கூறப்பட்ட நாடுகளின் எல்லைக் கோட்டை வரையறுக்க வேண்டும் என, கம்போடிய அதிபர் இளவரசர் சிகானுக் யோசனை கூறியிருக்கிறார்.

## ஐ. அ. குடியரசு புதிய அதிபர்

கெய்ரோ, மார்ச் 24

ஐக்கிய அராபியக் குடியரசில் அடுத்த மாதம் புதிய அதிபர் தெரிவு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

## நாஸர்-செளத்திரி சந்திப்பு

கெய்ரோ, மார்ச் 24

கெய்ரோவுக்கு விஜயம்செய்திருக்கும் இந்திய சேனாதிபதி ஜெனரல் செளத்திரி, ஜனாதிபதி நாஸரைச் சந்தித்துப் பேசினர்.

## "நான் சர்வாதிகாரியானால்..."

ஹன்வலை, செவ்.

"பிற்போக்காளர்களையும், சதிகாரர்களையும்நசுக்குவதற்கு சர்வாதிகாரத்தை ஏற்கவும் நான் தயாராய் இருக்கிறேன். நான் அதிகாரத்திலிருந்தால் சர். ஒலிவர், டட்லி சேனநாயகா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோர் சுலபமாகத் தப்பித்திருக்க முடியாது" என திரு. பிலிப் குணவர்த்தன இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

## தேசியப் பொருட்கள் விற்பனை

கொழும்பு, செவ்.

வருடந்தோறும் நங்கையர் பணிக்குழுவினரால் நடாத்தப்படும் தேசியப் பொருட்கள் விற்பனைக்காட்சி இம்மாதம் 28-ம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் லற்கின்ஸால் திறந்து வைக்கப்படும்.

இந்த விற்பனையில் பிரதானமாக வட-கீழ் மாகாண தேசியப் பொருட்கள் இடம்பெறும்.

## பிரதமருக்கு வேண்டுகோள்

கொழும்பு, செவ்வாய்

வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தற்போதைய வாழ்க்கைச் செலவை முன்னிட்டு அதிக சம்பளம் அளிக்குமாறு வர்த்தக முதலாளிகளுக்கு உத்தரவிடவேண்டுமென தேசிய ஊழியர் சங்கம் பிரதமரைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

# "எல்லைப் பிரச்னையை தீர்க்க பலாத்காரம் அவசியம்"

## ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் சீன வாதம்

அல்ஜீயர்ஸ், மார்ச் 24

எல்லைப்பிரச்னைகளைத் தீர்ப்பதில் பலாத்காரம் உபயோகிக்கக் கூடாது என்ற யோசனையை நேற்று இங்கு நடைபெற்ற ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாட்டில் சீன எதிர்த்தது.

சீனப் பிரதிநிதி மகாநாட்டில் பேசும் போது, சில சந்தர்ப்பங்களில் எல்லைப் பிரச்னையைத் தீர்க்க பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டியது அவசியம் எனக் கூறினர். எல்லைப் பிரச்னையை சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவின் யோசனையை அவர் தாக்கிப் பேசினர். அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம்ஒரு பெரிய மோசடி என்றும் சீனப் பிரதமர் குறிப்பிட்டார்.

ஆனல் மகாநாட்டில் பேசிய பெரும்பாலான அங்கத்தினர்களும் எல்லைப் பிரச்னைகள் சமாதானமாகத் தீர்க்கப்பட வேண்டும் என வற்புறுத்தினர்.

# ஓராண்டில் மூன்று லட்சம் புதிய துருப்புக்கள்

## இந்திய ராணுவம் பற்றி திரு. சாவன் தகவல்

புதுடில்லி, மார்ச் 24

கடந்த ஓராண்டில் இந்திய ராணுவம் 3,00,000 துருப்புக்களையும், 10,000 அகதிகளையும் புதிதாகச் சேர்த்திருப்பதாய் லோகசபையில் பாதுகாப்பு மந்திரி சாவன் அறிவித்தார்.

திரு. சாவன் மேலும் பேசிய போது, ரூபா 200 கோடி செலவில் 6 மலை டிவிஷன்கள் அமைக்கப்படவிருப்பதாயும் குறிப்பிட்டார்.

கடற்படையை வலுப்படுத்துவது மிகவும் முக்கியம் என்றும், இந்தியா நீண்ட கடல் எல்லையைக் கொண்டிருப்பதும், அண்டை நாடுகள் புதிதாக சப்மரீன்களைப் பெற்று வருவதும் இதற்குச் சில காரணங்கள் என்றும் பாதுகாப்பு மந்திரி கூறி இந்திய கடற்படைக்கு சப்மரீன்கள் அவசியம் என்றார்.

ஒலியை விட வேகமாக இயங்கும் விமானங்களைச் சப்ளை செய்வது பற்றி பல நாடுகள் அனுப்பியுள்ள தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு வருவதாயும் அவர் கூறினர்.

இறுதியில் பாதுகாப்புச் செலவுக்கு ரூபா 719,00,00,000 லோகசபை அனுமதித்தது.

# "வள்ளுவர் மாபெரும் தமிழ் முனிவர்"

## உருவப் படத் திறப்பில் உப ஜனதிபதி பாராட்டு

சென்னை, மார்ச் 2

"திருவள்ளுவர் மாபெரும் தமிழ் முனிவர். அறநிலைகளை வகுத்துக் கொடுத்த லக்ஷ்வாதி" என இந்திய உப ஜனதிபதி டாக்டர் ஸகீர் ஹூஸெய்ன் கூறினர்.

சென்னை சட்டசபை மண்டபத்தில் வள்ளுவரின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் ஹூஸெய்ன் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து விட்டு சென்னை வந்த பின் வள்ளுவர் உருவப் படத் திறப்புவிழாவை நடத்தினர். அந்தமானிலிருந்து புறப்படுமுன் அப்பகுதி மக்களுக்குச் செய்தி ஒன்றை அவர் ஒலிப் பதிவு செய்தார்.

## தொழிலாளர் வருடாந்தக் கூட்டம்

மன்னார், செவ்வாய்

மன்னார் உணவு விநியோக கூட்டுறவுச் சங்கத் தொழிலாளரின் வருடாந்தக்கூட்டம் அண்மையில் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. அ. புகாரி, உபதலைவர்: திரு. ரி. ஆறுமுகம், செயலாளர்: திரு. க. நவரத்தினம், உப செயலாளர்: திரு. பாலசுப்பிரமணியம்.

விழாவுக்கு பிரதம பேச்சாளராக மன்னார் மாவட்ட பதில் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கலந்துகொண்டார்.

## சிக்கிம் கண்டனம்

கேங்டாக், மார்ச் 24

பாகிஸ்தானில் சிறுபான்மையினர் நடத்தப்படும் முறை பற்றி சிக்கிம் அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

## பண்டிதமணியின் நூல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பண்டிதமணியின் அரிய படைப்பான இலக்கியவழி என்னும் சிறந்த நூல் வெகு விரைவில் திருத்தப் பதிப்பாக வெளிவர இருப்பதாக அறியக்கிடக்கிறது- நாவலர் எழுந்தார், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, சி. வை. தாமோதரம் கவினர் மகாலிங்கசிவம் முதலிய தலையங்கங்களைத் தாங்கி வரும் திருத்தப்பதிப்பாகிய இலக்கியவழி இலக்கிய ரசிகர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அரியதொரு விருந்தாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலக்கிய வழி திருத்தப்பதிப்பு 1965-ம்-ஆண்டில் ஜி. ஸி. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பாடப்புத்தகமாய் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மாதங்களில் ஷேக் அப்துல்லா விடுதலை?

புதுடில்லி, மார்ச். 24

காஷ்மீர் அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாய் தற்போது காவலில் வைக்கப்பட்டு வரும் ஷேக் அப்துல்லா இன்னும் இரண்டு மாதங்களில் விடுதலையாகக் கூடும் என "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை கூறியது.

அவருக்கெதிராகவுள்ள வழக்கை வாபஸ் பெறும் விஷயம் பற்றி டில்லியிலுள்ள சிரேஷ்டத் தலைவர்கள் கடந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களாக பரிசீலித்து வருவதாயும் அது கூறியது.

ஷேக் அப்துல்லா கடந்த 1953-ம் ஆண்டு முதல் சிறையில் இருந்து வருகிறார். அவர் கைது செய்யப்பட்ட போது, காஷ்மீரை ஒரு சுதந்திர நாடாக்க அவர் விருப்பம் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

## யு. எஸ். உதவி நிறுத்தப்படும்

வாஷிங்டன், மார்ச். 24

மலேஷியப் பிரச்னையில் இந்தோனேஷியா ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும்வரை அந்த நாட்டுக்கு அமெரிக்கா தனது பொருளாதார உதவியை நிறுத்திவைக்கும் என வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் கூறினர்.

ஸரவாக்கில் இந்தோனேஷியப்படைக்ளுக்கும் பிரிட்டிஷ் துருப்புக்களுக்கும் சமீபத்தில் கைகலப்பு ஏற்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

எல்லையிலுள்ள கொரில்லாக்களை இந்தோனேஷியா அகற்றிக் கொள்வதின் மூலம் மலேஷியாப பிரச்னையைத் தீர்க்க வழி வகுக்க வேண்டும் என பிலிப்பைன்ஸ் உப ஜனதிபதி யோசனை கூறியிருக்கிறார்.

## 3 தினங்களில் 800 பேர் பலி

புவனேஸ்வரம், மார்ச். 24

ஜாம் ஷெட்பூர், ரூர்கலா ஆகிய இடங்களில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களில் கடந்த 3 தினங்களில் 800 பேர் மாண்டதாக அறிவிக்கப் படுகிறது. கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இந்தப் பகுதிகள் வழியாக ரயில் மூலம் ஹிந்து அகதிகள் கொண்டுவரப் பட்டதைக் கண்ணுற்ற மக்கள், கலகத்தில் இறங்கியதாகக் கூறப் பட்டது.

கலகப் பகுதிகளிலிருந்த 45 அமெரிக்க ஆண், பெண், குழந்தைகள் பாதுகாப்புக்காக இந்திய அதிகாரிகளால் அகற்றப்பட்டனர் என அமெரிக்கத் தூதராலயம் அறிவித்தது.

ரூர்கலாவிலுள்ள 800 ஜெர்மானியர்கள் அகற்றப்பட வேண்டியதில்லை எனத் தீர்மானிக்கப் பட்டதாயும், 1500 இந்தியத் துருப்புக்கள் இங்கு வந்ததே அதற்குக் காரணம் என்றும் மேற்கு ஜெர்மனி தூதராலயம் அறிவித்தது.

## காங்கேசன்துறையில் கப்பல்

காங்கேசன் துறை, செவ்.

'மங்களூர்' என்னும் கப்பல் காங்கேசன் துறை, துறைமுகத்தில் நங்கூரம் இட்டு சுமார் 750 தொன் நிறையுள்ள பொருட்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. இக்கப்பலில் இருந்து ஒரு மோட்டார்காரும் இறக்குமதி செய்யப்பட இருக்கிறது.

சுமார் 500 தொழிலாளர்களுக்கு இதனல் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

## மணிவாக்கு

மூக்குணமாலயக்கப்பாலே செல்லடி முன்னும் பின்னும் பாராதேயடி.
—யோகசுவாமிகள்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு பங்குனி மீ 12ல. (25-3-64)

## ஒளி மறைந்தது

ஒளி மறைந்தது. சைவத்தையும் தமிழையும் வளர்த்து, நாஸ்திகர்களையும் ஆஸ்திகர்களாக்கிய அருள் ஒளி அணைந்தது. யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலிருந்து இலங்கை முழுவதற்கும் ஞானவொளி பரப்பிய யோகசுவாமிகள் சிவமாகிவிட்டார்.

ஆனல் யாழ்ப்பாணம்மட்டுமல்ல இலங்கை முழுவதும் அந்தகாரதத்துள் மூழ்கிவிட்டது பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்தியில் யாழ்பபாணத்துக்கு கடையிற் சாமியவர்கள் வந்ததன் பயனுகத் தோன்றிய ஞானபரம்பரையின் பொக்கிஷம் யோக சுவாமிகள்.

அரும்பெரும் செயல்கள் பலவற்றை யோகசுவாமிகள் செய்திருந்தபோதிலும் சிவதொண்டன்நிலையமொன்றை அமைத்து அதன் மூலம் சைவசமயத்துக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தியது அவரது நினைவாக என்றும் நிலைத்திருக்கும். சிவதொண்டன் பத்திரிகைமூலமும் சிவதொண்டன் நிலையம் மூலமும் அவர் செய்துவந்த தமிழ்ப்பணியும் சமயப்பணியும் அளவிடற்கரியது. யாழ்ப்பாணத்தில் தோன்றியபெரும்பாலான பெரியோர்களின் உபதேசங்களோ நூல்களோ கிடைப்பது அரிது. ஆனல் யாழ்ப்பாண மக்கள் செய்த தவப்பயனுக யோகசுவாமிகள் தமது அனுபவத்தையும் உபதேசங்களையும் நற்சிந்தனை என்னும் நூல் மூலம் நமக்குக் கொடுத்துள்ளார்கள். நற்சிந்தனைப் பாடல்கள் திருமூலர் திருமந்திரத்தையும், சித்தர் பாடல்களையும், தாயுமானவர் பாடல்களையும், போன்றவைமக்களுக்குநல்வழிகாட்டும் பண்புடையனவாயும் உண்மையான அனுபவ ஞானத்தைப் புலப்படுத்துவனவாயும் அவையுள்ளன. சுவாமிகள் பல கீர்த்தனங்களையும் ஆக்கி தமிழிசைக்கும் சேவை புரிந்துள்ளார்.

புராணபடனங்கள் மறைந்து வந்ததைக் கண்ட சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தில் கந்தபுராணப் படிப்பை ஆரம்பித்து வைத்தார். இதைத் தொடர்ந்து இன்று பல இடங்களிலும் புராணப் படிப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

ஆன்மலாபமே பொருளெனக்கண்ட அறிஞர் அநித்தியமான இந்த உலக இன்ப துன்பத்தில் மயங்காது தாமரை இலையில் நீர் போற் சகத்துடன் கூடி வாழ்வார். ஆன்மலாபத்தைப் பெற நினையாதவர் இந்த உலகத் துன்ப இன்பத்திலுற் கலங்கித் தியங்கித் திரிவார்கள். ஆன்மலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு நன்மை தீமையை வென்று நான் எனதென்னும் அகங்கார மமகாரங்களைக் களைந்த அறிஞர் இறைவன் திருவடி நிழலில் பிறபிறப்பற்றுப் பேரின்பத்துடன் வாழ்வார்" என்பது சுவாமிகளின் நற்சிந்தனை. அந்தப் பேரின்ப வாழ்வை அவர் அடைந்துவிட்டார்.

# யோக சுவாமிகள்

— ச. அம்பிகைபாகன் —
(அதிபர், வைத்தீஸ்வர வித்தியாலயம்)

**பரமபதம் அடைந்த யாழ்ப்பாணத்து யோகியான யோக சுவாமி அவர்களின் தெய்வீக வாழ்க்கையையும் நல் உபதேசத்தையும் அரிய குணத்தையும் தொண்டையும் பற்றித் தெளிவாக விளக்குகிறது இக்கட்டுரை.**

பரத கண்டத்தைப் புண்ணிய பூமியென்று விவேகானந்தர் முதலியோர் கூறியதற்குக் காரணத்தைஆராய்ந்தால், அங்கு காலத்துக்குக் காலம் வாழையடி வாழையாகச்சீவன் முக்தர்கள் தோன்றுவதே என்பது புலப்படும். பரதகண்டத்தின் ஒருபகுதியாகக் கருதப்படும் இலங்கையிலும் காலத்துக்குக்காலம் கடையிற்சாமி, செல்லப்பாச்சாமி போன்ற பெரியோர் தோன்றியுள்ளார். இவர்கள் மரபிற் தோன்றியவரே நமது யோக சுவாமிகளும்.

### செல்லப்பாச்சாமி

யோக சுவாமிகளின் குருவாகியசெல்லப்பாச்சாமி கடையிற்சாமியின் சீஷராவர். இவரை ஞானியென்று அறிந்தவர்கள் மிகச் சிலரே. இவருடைய பேச்சையும் செயலையும் பார்த்த பெரும்பாலார் இவரை விசரர் என்று கருதி விசர்ச் செல்லப்பா என்றே அழைத்தனர். தமது சுயரூபத்தை உலகுக்குக் காட்டவிரும்பாத இப்பெரியாருக்கு விசர்ச் செல்லப்பா என்ற பெயர் அதிக சந்தோஷத்தை கொடுத்திருக்குமென்பது திண்ணம். குலசேகர ஆழ்வார் தம்மைப் பற்றிக் கூறியது செல்லப்பாச் சாமிக்கும் பொருத்தமாகவிருக்கும்.

பேயரே எனக்கு யாவரும் யானும் ஓர்
பேயனே எவர்க்குமிது பேசியென்
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயனுயொழிந்தேன் எம்பிரானுக்கே.

இவருடைய புறக்கோலத்தை மாத்திரங் கண்ட அநேகர், இவரிடம் நெருங்கவில்லை. உலகத்தாருக்கு இடங்கொடுத்தால் அவர்கள் தலையில் ஏறிவிடுவார்களென்று கூறுவாராம். இப்பெரியாரே நமக்கு "முழுதும் உண்மை", "ஒரு பொல்லாப்புமில்லை", "எப்பவோ முடிந்த காரியம்", "நாமறியோம்" போன்ற மகா வாக்கியங்களைக் கொடுத்து அருளியவர்.

இவர் நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதியிலுள்ள ஒருசிறு குடிசையில் வசித்தார். யோக சுவாமிகள் இவரை நல்லூர்த் தேரடியிற்தான் சந்தித்தவரென்பது பின்வரும் அவர்வாக்கால் அறியலாம். சிவதொண்டனில் வெளிவரும் நற்சிந்தனைகளில் தமது குருவைக் கல்மனமும் கரையும்படி புகழ்ந்து பாடியிருக்கிறார். அவற்றில் மூன்று செய்யுட்களை இங்கே தருகின்றேன். அவற்றில் முதற்செய்யுளில் தம்குருவின் புறத்தோற்றத்தையும், இரண்டாம் செய்யுளில் அவரின் தன்மையையும், மூன்றும் செய்யுளில் சிவபெருமானே தமது குருவாகத் தோன்றியருள் செய்தாரென்பதையும் கூறியுள்ளார்.

சிரித்து நல்லூர்த் தெருவிற் திரிவார்
வெறித்த பார்வையர்வேடம் விரும்பிலர்
கறுத்த மேனியர் கந்தைத் துணியினர்
எரித்தனர் பவமினி யெனக் கில்லையே

பொறிவழியே போய்ப் புகுந்து திரிவேனை
நெறிவழியே நிறுத்தி நீயே நான் என்றுரைத்த
பெரியவனைப் பித்தனென்று பிறர்பேசும் பெருமானை
செறிபொழில் சூழ் நல்லை நகர்த் தேரடியிற் கண்டேனே

காட்டிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன்
நாட்டிலே ஞானகுருவாய் நயந்து வந்து
மீட்டான் அவன் றன்விரையார் மலரடியை
பாட்சிமைசேர் நல்லைநகர்த் தேரடியிற் கண்டேன்.

### துறவு

யோக சுவாமிகளும் தமது குருவைப் போல் முற்றுந்துறந்த துறவியாயிருந்த போதிலும் யாழ்ப்பாணத்தார் மீது கொண்ட அன்பினுல் தமது சுயரூபத்தைச் சிறிதாக நமக்குக் காட்டியுள்ளார்.

சுவாமிகளின் வாழ்க்கையை நாம் உற்றுநோக்கும்பொழுது நமக்குப் பிரதானமாகப் புலப்படுவது அவருடைய பூரணமான துறவுநிலையே. அவர் தம்முடைமை என்று ஒன்றையும் கருதுவதுங் கிடையாது. நானெக்கென்று ஒன்றையும் வைப்பதும் கிடையாது. அன்பர்கள் கொண்டு போய்க் கொடுக்கும் பொருள்களில் தாம் உபயோகிப்பது மிகச் சிறுபகுதியே. ஒருவர்கொண்டு வரும் பழம் முதலியவற்றை மற்றவர்களுக்குக கொடுப்பதே அவர் வழக்கம். அவருக்குத் தேவையான நேரத்தில் பணம் கிடைக்கும்; உடனே அதை செலவு செய்துவிடுவார். தேவையில்லாவிட்டால் யார் எவ்வளவு கஷ்டப்படுத்தினுலும் ஒருவரிடமும் பணம் வாங்கமாட்டார். பற்றற்றவனிடத்திலெல்லாப் பொருள்களும் தாமே வந்தடையும் என்னும் உண்மையை நாம் சுவாமிகளிடம் காண்கிறோம். சுவாமிகளும் இவ்வுண்மையை ஒருமுறை பின்வருமாறு கூறினர் "பிச்சைக்காரரில் இழிவான பிச்சைக்காரனும் நான்தான், மகாராசாக்களில் சிறந்த மகாராசனும் நான்தான்" (I am a beggar of beggars and a Maharajah of Maharajahs)

சுவாமிகளின் இன்னுமொரு சிறந்த குணம் என்னவெனில் ஒரு விஷயத்திலாவது ஒரு மனிதனிலாவது கட்டுப்படுவது கிடையாது. சிற்சில காலங்களில் சிற்சில தொண்டுகளைச் செய்வார். பின்னர் அவற்றை அறவே விட்டுவிடுவார். சில பிள்ளைகளுக்குச் சங்கீதம் கற்பதற்கு உதவி செய்யும் பொருட்டு சிலகாலம் வெள்ளிக்கிழமைகளில் வண்ணுர்பண்ணையில் பஜனை நடத்தினுர். பின்னர் புராண படனத்தை புனருத்தாரணம்செய்யும் பொருட்டு பெரியபுராண படனம், கந்தபுராணபடனம், இராமாயண படனம் முதலியவற்றை நடத்தினுர். பின்னர் இவற்றை விட்டுவிட்டார்.

சுவாமிகள் தம்மனம்பதியும் சில அன்பர்கள் வீட்டுக்குப் போவார். அவருக்கு விருப்பம் இல்லாவிட்டால் மற்றவர்கள் எப்படித் தெண்டித்தாலும் போகமாட்டார். மேலும் எதையும் வழக்கப்படுத்திக் கொள்வது கிடையாது. ஒருமுறை சுவாமிகளுக்கு ஓர் அன்பர் நாலு ஐந்து நாட்களாக இரவில தேநீர் அனுப்பி வந்தார் இது ஒரு வழக்கமாகப்போகிறது என்றெண்ணி ஒருநாள் தேநீர் கொண்டுவந்த பைய

(6-ம் பக்கம் பார்க்க)

ஆனல் சில தினங்களுக்குள்ளாக ஒரு கொடை வள்ளலையும், சமயப் பெரியார் ஒருவரையும் இழந்து, சோதனைமிக்க இச்சமயத்தில் செய்வதெதுவென அறியாது கலங்கி நிற்கும் தமிழ் மக்களுக்கு அருள் ஒளி மறைந்தது மேலும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. தோன்றுத் துணையாக நின்று அந்த ஒளி வழிகாட்டுவதற்கு அவர் அருளிய நற்சிந்தனைப்படி நடப்பதுதான் தமிழ் மக்கள் கடமை.

## ஆசானைக் கண்டேன்

ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ்நல்லூரிற்
பேசா தனவெல்லாம் பேசினன் - கூசாமல்
நின்றேன் நீ யாரடா வென்றே அதட்டினன்
அன்றே யான் பெற்றேன் அருள்.

அருளொளிக்குள்ளே புகுந்து சென்றேன் யான் [ஆங்கே
இருள்சூழ் திருப்பதைக் கண்டேன் - பொருளறி [யேன்
ஒருபொல்லாப்பில்லையென வோதினன் கேட்டு [நின்றேன்
மர்மந்தேராது மலைத்து.

மலைத்து நின்ற என்னை மனமகிழ நோக்கி
அலைத்துநின்ற மாயை அகலத்—தலைத்-தலத்திற்
கைகாட்டிச் சொல்லலுற்றுன் கந்தன் திருமுன்றில்
மெய்ம் மறந்து நின்றேன் வியந்து.

வியந்துநின்ற என்றனக்கு வேதாந்த உண்மை
பயந்தீரும் வண்ணமவன் பண்பாய்-நயந்துகொள்
அப்படியே உள்ளது காண் ஆரறிவார் என்றுனல்
ஒப்பில்லா மாதவத்தோன் உற்று.

உற்றுரும் போனுர் உடன்பிறந்தார் தாம் போனுர்
பெற்றுரும் போனுர்கள் பேருலகில்-மற்றுரும்
தன்னைப்பார் இல்லாத் தலைவன் திருவருளால்
என்னைப் பார் இன்றி யிருந்தேன்.

[யோகசுவாமிகளின் நற்சிந்தனையிலிருந்து எடுக்கப்பெற்றது—1953]

## ஐயாறன் எழுதுவது

சிவராத்திரி, லிங்கோற்பவ காலம். "சிவன்கோவில் இடிகிறதடா" என்றுராம் யாழ்ப்பாணத்து முனிவர். என்ன என்று பொருள் விளங்கவில்லை பலருக்கும்.

கொழும்பிலே சரஸ்வதி மண்டபத்தில் ஸ்பென்ஸர் ராஜரத்தினத்தாரின் பூதவுடல் கதிர்காமத்திலிருந்து வந்த சமயத்தில் ஓரன்பர் மூலம் மேற்குறித்த செய்தியைக் கேட்டதும், ஏதோ பெரிய துக்கம் காத்திருக்கிறதென்று தெரிந்தது. நேற்றுக் காலை யாழ்ப்பாண முனிவரின் மறைவைக் கேட்டபின்தான் அந்த தீர்க்க தரிசனத்தின் கருத்துவிளங்கியது.

நடமாடும் கோவிலாகவும், பேசுந் தெய்வமாகவும் இருந்து பலருக்கும் ஆதரவும், யோசனையும், ஆசியும் அளித்து, அருளிய முனிவர் தேகாலயம், ஒரு சிவாலயமேயல்லவா?

அந்த புனித உடலிலிருந்த சிவஜோதி இப்போது உலகெல்லாம் பரவி, நினைப்பவர் மனமெல்லாம் கோவிலாகக் கொண்டிருக்கின்றது.

* * *

"எல்லாம் எப்போதோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்புமில்லை" என்ற முனிவர் வாக்கை நினைத்து நாம் இப்போது ஆறுதல் கொள்ள வேண்டியதே. என்றுலும் மனதுக்கு ஆறுதலும், தைரியமும் வேண்டியிருக்கையில், இனி யாரிடம் சென்று கேட்பது? தாயை இழந்த சேய் போல் பலரும்தவிக்கின்றுர்கள்.

வானொலி மூலம் நேற்று காலை இச்செய்தியைக் கேட்டதும் கொழும்பிலே பலரும் திடுக்கிட்டோம். பல பக்தர்கள் யாழ்தேவியில் புறப்பட்டு வழிநெடுக நற்சிந்தனைப் பாடல்களைப் பாடிக்கொண்டே இரவு கொழும்புத்துறை வந்து ஆழ்ந்த சமாதியிலிருந்த அந்தப் புனித உடலை ஆவலுடன் தரிசித்து வணங்கிப் பரவசமாயினர். இனிமையான நற்சிந்தனைப் பாடல்கள் இரவெல்லாம் ஒலித்துக்கொண்டிருந்தன. எங்கும் அமைதியும், தூய்மையும். பக்திவெள்ளமும் கரைபுரண்டோடியது.

* * *

பலருக்கும் அவர் மறைவு ஈடுசெய்யமுடியாத பெரிய நஷ்டம். சிறப்பாக நம் 'ஈழநாடு' பத்திரிகைக்கு இது பெரிய இழப்பாகும், அப்பெரியவரின் நல்ல யோசனையையும் ஆசியையும் பெற்றே இதை ஆரம்பித்தோம்.

அன்பு, ஒற்றுமை, தெய்வ பக்தி இவற்றைப் பரப்பி மக்களுக்குத் தொண்டு செய்வதையே பத்திரிகையின் நோக்கமாகக்கொண்டு நடத்த வேண்டுமென்று அடிப்படைக் கொள்கையை அவரே வகுத்துக்கொடுத்தார்கள். அச்சடித்த முதல் பிரதியை அவரது திருவடியில் சமர்ப்பித்தபோது, நல்லாசி கூறி வாழ்த்திஞர்கள். அந்த மகான் காட்டிய வழியில் தொண்டாற்ற முயன்றுவருகின்றோம்.

ஈழத்தவருக்கு மட்டுமன்றி வெளிநாட்டார் பலரும் இப்பெரியவரை வந்து தரிசித்து, அருள் பெற்றுவந்துள்ளனர். இனி அவர் தோன்றுத்துணையாக இருந்து எல்லோருக்கும் நல்வழி காட்டித் துணைசெய்வார்! வாழ்க யாழ்ப்பாண முனிவர் நாமம்!

* * *

சாதாரணமாக பெட்ரோல் கார்ப்பரேஷன் தலைவர் ஆழ்வாபிள்ளை சிரிக்கவேமாட்டாராம். அவரையும்கூட பன்முறையும் சிரிக்கவைத்துவிட்டது ராஜ் நகைச்சுவை நாடக மன்றத்தார் நடித்த "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்ற நாடகம். சுமார் மூன்று மணி நேரம் நடந்த அந்த நாடகத்திலே ஆரம்ப முதல் கடைசிவரை ஒரே சிரிப்புத்தான்.

(2-ம் பக்கம் பார்க்க)

# சைவமக்களுக்கு பேரிழப்பு

— தா. ச. துரைராசா —
(மாநகரசபை முதல்வர், யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணத்தின் தவயோகி என்று அழைக்கப்படும் "யோகசாமி" அவர்கள் 24-3-64-ம் திகதி காலை 3-45 மணிக்கு இவ்வுலகை விட்டு சிவபதமடைந்துள்ளார்.

ஈழத்தின் அருந்தவப் பயனாக, 20-ம் நூற்றாண்டுத் தெய்வமே வடிவாய் நல்லையம்பதியில் நடமாடி, சீவன் முக்தராகிய ஸ்ரீ செல்லப்பா சுவாமிகளின் தலைசிறந்த சீடராவர். ஸ்ரீ செல்லப்பா சுவாமி அவர்கள் கடையிற் சுவாமி அவர்களின் சீடர்களில் ஒருவராவர். கடையிற்சுவாமி அவர்கள் 19ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தார் என்பதே மக்களின் நம்பிக்கை. கடையிற்சுவாமி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்த பின்னரே யாழ்ப்பாணத்தில் ஒரு ஞான பரம்பரை உருவாயிற்று. கந்தர்மடத்திலுள்ள வேதாந்த மடமும், உசன் மடமும், ஏழாலை மடமும் கடையிற் சுவாமி அவர்களின் சீடர்களாலேயே உருவாக்கப்பட்டன.

நல்லையம்பதி ஸ்ரீ செல்லப்பா சுவாமி அவர்கள் எந்த மடத்தையும் ஆரம்பிக்காவிட்டாலும் யோக சுவாமி அவர்களை ஞான வழியில் திருப்பி விட்டவராவர். உலகிற்கு ஒரு சுவாமி விவேகானந்தரை எப்படி ஸ்ரீ ராமகிருஷ்ண பரம்மஹம்ஸர் அளித்தாரோ அதே போன்று ஈழத்திற்கு ஒரு யோகசுவாமியை ஸ்ரீ செல்லப்பா சுவாமி அவர்கள் அளித்தார்.

யோகசுவாமி அவர்கள் தமிழுக்கு 1872-ம் ஆண்டுவைகாசி மாதம் 9-ம் திகதி பிறந்தார். இவரது தகப்பனார் பெயர் திரு. அம்பலவாணர். அவிட்ட நட்சத்திரத்திலே பிறந்த யோக சுவாமி அவர்கள் எண்ணற்ற அடியார்களின் அல்லல்களைக் களைந்தவர். பலரது வேண்டுகோள்களையெல்லாம் வேண்டியவாங்கு அளித்தவர். சாதி, சமய வேறுபாடின்றி யாருக்கும் சிவன் அருளை அள்ளி வழங்கியவர். யோக சுவாமி அவர்கள், வாக்கால், பரிசத்தால், நயனத்தால், மந்திரத்தால் பல்வேறு அடியார்களுக்கு ஆன்மா ஈடேற்றம் அளித்தவர். உலகில் நடக்கும் யாவுக்கும் சாட்சியாக மறைந்திருந்து சிவத்தொண்டு இடையறாது செய்வித்தவர்.

1935-ம் ஆண்டு மார்கழி மாதம் "சிவ தொண்டன்" என்ற தெய்வீக இதழை நடைபெறச் செய்து உலகினருக்கு மெய்நெறி பரப்பத் தொடங்கி எண்ணற்ற அடியவர்களின் துன்பங்களையெல்லாம் துடைத்தெறிந்தார். இந்தத் தெய்வீக இதழ் இன்றும் நடைபெற்று வருவது யோக சுவாமி அவர்கள் ஆரம்பத்தில் செய்த சிவத்தொண்டின் பலாபலனாகும்.

இவர் அநேகமான நன்னெறிப் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்கள் பெரும்பாலும் இவரது குருவான ஸ்ரீ செல்லப்பா சுவாமிகளைப் பற்றியதே. சைவ சமய சித்தாந்த அடிப்படையின்படி சிவபெருமானே தனது குருவாகத் தோன்றி ஞான வழியைக் காட்டினார் என்பது இவரது நம்பிக்கை. செல்லப்பா சுவாமி அவர்களுக்கு அடுத்ததாக யோகர் சுவாமி அவர்கள் நல்லூர்க் கந்தன்மேல் அநேக பாட்டுக்கள் பாடினார். இவர்களின் பின்னர் தான் நல்லூர் முருகன் சந்நிதி பாடல் பெற்ற தலமாயிற்று என்று சொன்னால் அது மிகையாகாது.

யோகர் சுவாமி அவர்கள் அண்மையில் பல சமய நெறி விளக்கும் பாத யாத்திரைத் தொண்டு, யாகம் போன்றவற்றைத் தமது அடியார்களைக் கொண்டு இயக்கியவர். சிவ பக்தர்களின் தொண்டு இந்நாட்டில் மேலும் மேலும் வளர்ச்சி பெறும் முகாமாகவும், வருங்காலச் சிவனடியார்களுக்கும் யாழ்ப்பாணத்தில் ஒரு சிவதொண்டன் நிலயத்தை நிறுவியதுடன், மட்டுநகரிலும், சிற்றூண்டக் குடியிலும் சிவதொண்டன் நிலயங்கள் நிறுவ ஆவன அளித்தவர்.

சுவாமி அவர்களின் மறைவு குறித்து எனது சொந்த அபிப்பிராயமொன்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். எனது தகப்பனார் திரு. தா. சபதிப்பிள்ளை அவர்கள் யோக சுவாமிகளிடத்து மிக்க விசுவாசமும் நம்பிக்கையும் அன்பும் கொண்டவர். இதன் காரணமாக யோக சுவாமிகளுக்கும் எனது வீட்டாருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது. 1930 ம் வருடத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் யான் கல்வி கற்கும்போது நான் யோக சுவாமி அவர்களை எனது வாழ்வில் முதல் தடவையாகத் தரிசித்தேன். அன்று தொடக்கம் நேற்று (24-3-64) சுவாமிகள் அதிகாலையில் சிவபதம் அடையும்வரையில் எனது சொந்த வாழ்விலும்சரி, அரசியல் உத்தியோக வாழ்விலும் சரி நான் எதிர் நோக்கவேண்டிய சிக்கல்கள் கஷ்டங்கள் ஏற்பட்ட போதெல்லாம் சுவாமிகளினது ஆசீர்வாதம் எனக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்தது. 1961ம் ஆண்டு முதற் தடவையாக யான் யாழ். நகர முதல்வராகப் பதவியேற்கப் பாக்கியம் கிடைத்தபோது சுவாமிகளினது ஆசீர்வாதத்தை முதலில் பெற்ற பின்னரே மாநகர முதல்வர் என்ற கோதாவில் எனது கடமைகளை ஆரம்பித்தேன்.

யோக சுவாமிகளினது மறைவு ஈழத்துச் சைவமக்களுக்குப் பெரும் இழப்பாகும். ஸ்ரீ யோக சுவாமி அவர்கள் தாம் ஞான உபதேசம் பெற்ற தினமாகிய திருநாளில் சமாதி

(6-ம் பக்கம் பார்க்க)

# முற்றுந் துறந்த முனிவர்

— செ. மயில்வாகனம் —
(அளவெட்டி)

1872-ம் ஆண்டு மே மாசம் 9-ம் திகதி திருவவதாரம் செய்த யோக சுவாமி அவர்கள் இன்று அதிகாலை 3 மணி 18 நிமிஷத்தில் சிவபதம் அடைந்தார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட அவருடைய அளவற்ற அடியார்கள் தந்தையை இழந்த மைந்தரைப் போலவும் தாயைப் பிரிந்த சேயைப் போலவும் தவிக்கின்றனர்.

யோக சுவாமிகள் பிறவியாகிய வெவ்வெயில் வருந்த முற்றோர்க்கு மென்நிழலாகவும், வேண்டியார் வேண்டியதை ஈயும் கற்பக தருவாயும், பிறவிப் பெருங்கடலைக் கடக்க விரும்புவார்க்கு அருட்கரையில் சேர்க்கும் பெரும் தெப்பமாகவும், அஞ்ஞான விருளிற் சிக்கி இடர்படுவார்க்கு மெய்ஞ்ஞான சோதியாகவும், அல்லற்பட்டாற்றாது அழுதவர்களுக்கெல்லாம் அல்லலகற்றி ஆட்கொண்டு ஆனந்த மாக்கும் அருள் வள்ளலாயும், துறவு மார்க்கம் இது வென வாழ்ந்து காட்டிய முற்றத் துறந்த முனிவராயும் விளங்கினார்கள்.

வெவ்வேறு கோணங்களிலும் வெவ்வேறு உயரத்தில் இருந்து பார்ப்பவர்க்கு வெவ்வேறு தன்மைத்தாயும், வெவ்வேறு தோற்றமுடைத்தாயும் விளங்கும் மலைசிகரம் போன்றது அவருடைய வாழ்க்கை. சமயங்கடந்த மோன சமரச ஞானியாய் வாழ்ந்த அவர், எல்லாச் சமயங்களும் இறைவனடியை அடையும் வழிகளே என்ற சர்வசமய சமரசஞானியாகவே வாழ்ந்தார். அவரைத் தரிசித்த பல்வேறு சமயத்தவர்களும் தங்கள் தங்கள் சமயங்களிலெல்லாம்கூறப்பட்ட உன்னத இலட்சியங்கள் சுவாமிகளிடத்து விளங்குவதைக் கண்டு அன்பர்களானார்கள். "கங்குல் பகலற்ற திருக்காட்சியர்கள் கண்டநெறி, எங்கும் ஒரு நெறிகாண் எந்தாய் பராபரமே" என்றதாயு மானார் கூற்றை சுவாமிகள் மெய்ப்பித்தார்கள்.

சுவாமிகளுடைய குருவாகிய செல்லப்பாச் சுவாமிகளைப் போலவே சிறந்த துறவியாய்ச் சுவாமிகள் விளங்கினார்கள். அவருடைய அடிப்படைக் கொள்கை, 'முழுதும் உண்மை' 'சர்வம் பிரம்மம்', 'எல்லாம் சிவம்', 'எங்கும் சிவம்', 'எல்லாம் நாம்' என்ற வாக்கியங்களில் அடங்கும்.

"ஈதனைத்தும் சொருபமே
என்னில் யானிங்கு எத்தை
இச்சிப்பேன் எதை இகழ்
வேன் எனல் பற்றின்மை,

மாதுயர் தீரிது சீவன்முத்தர்
செய்யில் மனனுமால்யானில்
லைப் பிறருமில்லை

மேதகும் இன்பங்க ளெல்
லாம் மேவின்மேவ, மேவாதே
மேவாதாயிடுக வென்றே.

மாதுயர் தீர் பற்றின்மை
உள்ளே உண்டேல்
உயர் விட்டுக்கு அது நெறி
யென்றுணர்தியன்றே"

என்று இராமபிரானுக்கு வசிட்டமுனிவர் கூறியருளினார். 'முழுதும் உண்மை', 'எல்லாம் சிவம்' என்ற உண்மையை அனுபவத்தில் கண்டவர்க்கு எதைப் பற்றுவது? எதை விடுவது? எதைப் பேசுவது? எதை இகழ்வது? எதைசெய்வது? என்ற கேள்விகள் எழா. பற்றுவதற்கும் விடுவதற்கும் இரண்டாவது பொருள் இல்லை என்று கண்ட எங்கள் சுவாமிகள் முற்றத்துறந்த முனி அரசாயும், பேரானந்தப் பெருவாழ்வை இங்கு எம் கண்முன் வாழ்ந்துகாட்டிய பெரியாராயும் விளங்கினார்கள்.

சுவாமிகள் அடியார்களுக்கு கூறுவார்கள்: "ஒருவர் வந்து விட்டார் என்று நினைத்தாலே அஞ்ஞானம், அதுவே பாவம்".

தன்னை வணங்குவார்க்கு "நானே என்னை வணங்குகிறேன்", "ஒரு வித்தியாசமுமில்லை" என்றுங் கூறுவார்.

எல்லாமாய் அல்லவுமாய் இருந்த பரம்பொருளை, இருந்தபடி இருந்துகாட்டிச் சொல்லாமற்சொல்லித்திரிந்தார் சுவாமிகள்.

"அடிமுடியு நடுவுமற்ற பரவெளி
மேலுற்றால் அத்துவித
ஆனந்த சித்தமுண்டாம் நமது
குடிமுழுதும்பிழைக்கும் எடுத்த
கோலமெல்லாம் நன்றாகும்
குறைவு நிறைவறவே
விடியு முதயம்போல அருளுத
யம் பெற்ற வித்தகரோ
டுங்கூடி விளையாடலாகும்
படிமுழுதும் விண்முழுதும் தந்
தாரலுங்களியாப் பாலருடன்
உன்மத்தர் பைசாசர்
குணம் வருமே".

என்ற தாயுமானப் பெருந்தகையார் வாக்குக்கு எடுத்துக் காட்டாய் எங்கள் சுவாமிகள் வாழ்ந்தார்கள். அவருடைய வாழ்க்கையைப் பின்பற்றிப் பேரானந்தப் பெரு வாழ்வை அடைய நாமெல்லாம் முயல்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஓம்

# யோகாநந்த ஐயனே போற்றி

[யோகசுவாமிகளுடன் நெடுங்காலம் நெருங்கிய ஆத்மீகத் தொடர்புகொண்டிருந்த காலஞ்சென்ற கவிப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் 1920-ம் ஆண்டில் இயற்றிய "யோகாநந்த நவரத்தின மாலை".]

காப்பு

நல்லை நகர்க் கரசே நானிலத்தோர் போற்றும்
செல்லப்பரென்னும் ஞானதேசிகனே — தொல்லுலகில்
யோகமுனி எந்தைதனைத் தந்தளித்த தூயோனே
தேகமதே யானென்கை தீர்.

(1) யோகநாயகனே போற்றி
உத்தமர்க் கிறைவா போற்றி
மோகமார் சோக மெல்லாம் முனிந்திடும்
முதல்வா போற்றி
தேகமே யானென் றெண்ணும்
தீவினைச் சிந்தை கெட்டு
ஏகமாய் நீயாய் நிற்க
இன்றெனக் கருள்வாய் கோவே.

(2) கருணைமா கடலே அன்பர்
கருத்தினில் விளங்குந் தேவே
உருவமாய் அருவமாகி
உலகெலாம் தானே யாகி
ஒருவனாய் இலங்கும் யோகா
ஊழ்வினை அதனைப் போக்கி
உருவிலாச் சோதி உன்னோ
டொன்றதாய் நிலைப்ப தென்றோ.

(3) தந்தை தாய் பெண்டிர் செல்வம்
தஞ்சமென் றெண்ணு மெந்தன்
சிந்தையின் இருளை நீக்கி
சிவமதாய் விளங்க வைப்பாய்
மந்திர மறைகள் போற்றும்
மாபெரும் பொருளே போற்றி
சுந்தர வடிவே போற்றி
சோதியே யோகா போற்றி

(4) விண்ணவர் வாழ்வு வேண்டேன்
வேந்தர்கள் உறவு வேண்டேன்
கண்ணினால் மருட்டும் மாயக்
கன்னியர் நேசம் வேண்டேன்
மண்ணொடு பொன்னும் வேண்டேன்
மகிழ்வுறு கீர்த்தி வேண்டேன்
என்னுளே நீயே யாகி
இலங்கிடல் வேண்டும் யோகா.

(5) தேகமே யானென் றெண்ணி
தியங்கியே மயங்கி நானு
போகமே மெய்யென் றெண்ணி
பூவையர் தம்மைக் கூட
வேகமே யுற்று மிக்க
விரைந்திடும் மனது தன்னை
சோகம் பாவனையில் நாட்டி
யோகனே ஆட்கொள்வாயே.

(6) எல்லாமும் தானே யாகி
எவ்வுயிரும் தானேயாகி
நல்லாரும் தானே யாகிப்
பொல்லாரும் தானே யாகி
கல்லாரும் தானே யாகிக்
கற்றவரும் தானே யாகி
நில்லாமல் நிற்கு மந்த
நிர்விகற்பம் வேண்டும் யோகா.

(7) முத்தியும் வேண்டேன் ஓங்கும்
மூவர்கள் பதமும் வேண்டேன்
சித்தியும் வேண்டேன் யோகச்
சிறப்பதும் வேண்டேன் யோகா
நித்தமும் உனக்கே அன்பு
நிலைத்துமே யானுங் கெட்டு
சுத்தமாம் பிரமாகார
சொருபத்தில் இருத்தல் வேண்டும்.

(8) நித்தனே நிமலா போற்றி
நினைப்பவர் மனத்தோய் போற்றி
சுத்தனே யோகா போற்றி
சுயம்பிரகாசா போற்றி
சித்தனே சிவமே போற்றி
சின் மயாநந்தா போற்றி
அத்தனே அரனே போற்றி
அருட் குருமணியே போற்றி.

(9) தத்துவா தீதமான
தனிமுதற் பொருளே போற்றி
எத்திசை தானுமாகி
எங்குமாய் நிறைந்தாய் போற்றி
முத்தனே முதல்வா போற்றி
முனிவர்கட் கரசே போற்றி
அத்தனே யோகாநந்த
அய்யனே போற்றி போற்றி.
ஓம் தத் சத்
குருவடி வாழ்க.

# யோக சுவாமி.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்: "நான் பிச்சைக்காரன், பசித்தால் உங்கள் வீட்டில்வந்து கேட்டுச் சாப்பாடு வாங்கிச் சாப்பிடுவேன். இந்த வழக்கத்தை வைக்க வேண்டாம் என்று உன் தகப்பனரிடம் சொல். கொண்டுவந்ததைக் கொண்டு போ."

## சுவாமிகளின் அனுபவம்

சுவாமிகளிடம் பலவித கொள்கையுடையவர்களும் பலவித நிலையிலுள்ளவர்களும்வருவார்கள். அவர்கள் ஒருவருடையநம்பிக்கையையும் குழப்புவது கிடையாது. இதனுல் ஒவ்வொருவரும் சுவாமிகள் தங்கள் தங்கள் கொள்கையுடையவர் என்று கருதுகின்றனர். இதனுல் அவருடைய உண்மை அனுபவம் இன்னதென்று அறிவது கடினந்தான். ஆனுல் அவருடைய வாக்கை கூர்ந்து நோக்குவோர்க்கு உண்மை புலப்படும். 'நீயே நான்', 'சீவனே சிவன்', 'நாமே அவன்' என்னும் வாக்குக்களைக் கவனித்தால் எங்கும் ஒரு பொருளையே அவர் காண்கிருரென்பது புலப்படும். சுவாமிகளின் அனுபவத்தைப் பின்வரும் விவேகானந்தர் இயற்றிய சந்நியாசகீதம் தெளிவாகக் கூறுகின்றது:

சலியா மனத்து வலியார் துறவீ!<br>
ஒன்றே யுளதவ் வொன்றும் என்றும்<br>
தன் வயத்தது வசய்த்தா விருப்பதுவே<br>
யாவையு முணர்ந்த தாவிலாத் தனிமை<br>
நாம ரூபமாம்இவை இல்லது<br>
களங்கம் இன்றி விளங்கும் பொருளது<br>
இவ்வெளி மயக்கெலாம் அவ்வொருபொருட்கண்<br>
உளதே யாகும் பலகறு லோகக்<br>
காட்சி யாகவும் சாட்சி யாகவும்<br>
ஆன்மா வாகவும் அப் பொருள் தோன்றும்<br>
அதுதான் நீ என்றறியக் கடவை<br>
ஓதுக நீ 'ஓம் தத் சத் ஓம்' என.

சுவாமிகள் எங்கும் பரம்பொருளைக் காண்பதாற்ருன், ஒருவரிடமுங் குற்றங் காண்பது கிடையாது. உண்மையில் அவருக்குஉயர்வுதாழ்வு காந்திபடிகளுக்கும் வித்தியாசந் தோன்றுவது கிடையாது. எல்லாம் சிவன் செயல் என்று அறிந்தவர்களுக்கு வித்தியாசங்கள் தோன்ருதென்பது, பின்வரும் தாயுமானவர் வாக்கால் நன்கு புலப்படும்.

அவனன்றி யோரணுவும் அசையாதெனும்<br>
பெரிய ஆப்தர்மொழி யொன்று கண்டால்<br>
அறிவாவதேது சில அறியாமையேது இவை<br>
அறிந்தார்கள் அறியார்களார்<br>
மௌனமொடிருந்ததார் என்போலுடம்பெலாம்<br>
வாயாய்ப் பிதற்றும் அவரார்<br>
மனதெனவும் ஒருமாயை யெங்கே இருந்துவரும்<br>
வனமையொடி ரக்க மெங்கே<br>
புவனப் படைப்பதென் கர்த்த வியமெவ்விடம்<br>
பூதபேதங் களெவ்விடம்<br>
பொய்மெய் இதம் அகிதம் மேல் வருநன்மை தீமையொடு<br>
பெறுமை பொருமையு மெவ்விடம்<br>
எவர்சிறியர் எவர்பெரியர் எவர் உறவர் எவர் பகைஞர்<br>
யாது முனையன்றி உண்டோ<br>
இகபர பிரண்டிலும் உயிரினுக் குயிராகி<br>
எங்கு நிறைகின்ற பொருளே.

## அவர் உபதேசம்

சுவாமிகள் தம்மிடம் வருகிறவர்களுக்குச் செய்யும் உபதேசம், ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் செவ்வனே செய்ய வேண்டும் என்பதே. பஞ்சமா பாதகங்களை ஒழித்து ஒருவன் தனது கடமையைச் சரிவரச் செய்து வருவானுயின் அவனுக்குப் படிப்படியாக உண்மை விளங்கி வருமென்பது சுவாமிகள் கருத்து. ஒவ்வொருவருடைய கடமையும் அவரவர் பிராரத்துவத்துக்கு ஏற்றதாக இருக்குமென்றும், அதில் ஏற்றத்தாழ்வு பார்ப்பது பிழையென்றும் கூறுவர். இனி உண்மையை உணர விரும்புவோர் எல்லோரும் துறவுநிலை பூணவேண்டுமென்ற அவசியமில்லை என்பர். பண்டைக் காலத்து இருஷிகளும் இக்காலத்து செல்லாச்சியம்மா போன்றவர்களும் இல்லறத்திலிருந்தே பரம்பொருளை எய்தினரென்று எடுத்துக் காட்டுவர். துறவுநிலை ஒருசிலருக்கே உரியதென்பது சுவாமிகள் கருத்துப் போலும்.

மனிதன் தன்னைத்தானே திருத்திக் கொள்ள வேண்டுமன்றி உலகத்தைத் திருத்த முயல எத்தனித்தல் கூடாதென்பர். இதற்கு உதாரணமாக விவேகானந்தர் எடுத்துக் காட்டிய நாய்வால் கதையைக் கூறுவர். உலகத்தைத் திருத்த முயலுவது நாய்வாலை நிமிர்த்த முயலுவதை ஒக்கும் என்பர். உலகத்துக்கு நன்மை செய்வதால் நாமே அதிக நன்மையை அடைகிரேம் என்பதை உணர வேண்டுமென்றும் கூறுவர்.

உலகத்திலே வாழுவோர் நற்பழக்கங்களைப் பழகிக் கொள்ள வேண்டுமென்றும் ஒரு பழக்கத்தைப் பழகிக் கொண்டால் அதை விடுவது ஞானிக்குங் கஷ்டமென்றும் கூறுவர்.

## அரிய குணம்

தமது அன்பர்களை ஒருபொழுதும் மறவாமை சுவாமிகளின் அரிய குணம். அன்பர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் தம்மாலியன்ற உதவி புரிவர். செல்லாச்சியம்மாவிடத்து சுவாமிக்கு அதிக அன்புஉண்டு. அம்மாவும் இவரைத் தமது சகோதரனுகவே பாவித்து வந்தார். இறுதிக் காலத்தில் அம்மா நோய்வாய்ப்பட்டிருந்து உளத்தூய்மை அற்றவர் கொடுக்கும் உணவை உட்கொள்ள முடியாதவராயிருந்தார். இதைக் கண்ட யோக சுவாமிகள் சில அன்பர்களைக் கொண்டு உணவு சமைப்பித்து தம் கையிலெடுத்துக் கொண்டு போய்க் கொடுத்து வந்தார்.

இப்படிப் பல அன்பர்களுக்கு உதவி செய்திருக்கிருர். இதற்காக அவரைக் குறை கூறுவோருமுளர். இவர்கள் அன்பின் வலிமையை அறியாதவர்கள். சிவபெருமான் பக்தி வலையில் பட்டால் சுவாமிகள் படுவது அதிசயமா?

## அரிய தொண்டு

சுவாமிகள் யாழ்ப்பாணத்தாருக்கு அருந் தொண்டு புரிந்திருக்கிருர். அநேக இளைஞர்களை நெறியல்லா நெறியிற் போகவிடாது, நன்னெறிப் படுத்தியுள்ளார். பொதுசனசேவையில் யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஈடுபடுபவர்களில் அநேகர் சுவாமிகளின் கருணைக்குரியவர். நிரீச்சுரவாதிகள்கூட அவருடைய சக்தியால் ஈர்க்கப்பட்டு கடவுளிடத்து நம்பிக்கையில்லாவிட்டாலும் சுவாமிகளிடம் நம்பிக்கையுள்ளவர்களாகக் காணப்படுகிருர்கள்.

சுவாமிகளுக்கு தமிழில் அதிக அன்பு உண்டு. அவ்வன்பை மற்றவர்களுக்கும் ஊட்டிஞர். தமிழ் நூல்களில் திருவாசகத்தில்தான் சுவாமிகளுக்கு அதிக பற்று என்று கூறலாம். அவருக்குத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய நூல்களில் நல்ல பயிற்சியுண்டு. தம்மிடம் வருபவர்களைக் காலை மாலையில் சிவபுராணத்தைப் பாராயணஞ் செய்யச் சொல்லுவர். ஒரு முறை ஓரன்பரை திருவாசகத்தை வாங்கி, சிவபுராணத்தைக் கிரமமாக ஓதும்படி கூறினர். இவர் திருவாசகத்தைப பற்றி முன்பு கேள்விப்படாத படியால் நூலின் பெயரை உடனே மறந்துவிட்டார். வீட்டுக்குப் புறப்படும்போது சுவாமிகள் கூறிய நூலின் பெயரென்னவென்று ஓர் அன்பரைக் கேட்டெழுதிக் கொண்டு போனுர். இவர் போல் தமிழ் மணம் இல்லாதவர்களுக்கெல்லாம், தமிழ் அன்பை உண்டாக்கிவருகிருர்.

இக்காலத்து எழுத்தாளர்களில், கலியாணசுந்தர முதலியார் நூல்களில் தான் சுவாமிகளுக்கு அதிக விருப்பம். அதிலும் 'சைவத்தின் சமரசம்' என்ற நூலே சிறந்ததென்பது அவர் கருத்து. இந்நூலை எல்லோரையும் படிக்கும்படி கூறுவர்.

சுவாமிகளுக்கு ஓரளவு சங்கீத ஞானமுண்டு. சில கீர்த்தனங்களை இயற்றி அவற்றைச் சுரப்படுத்துவித்து சிவதொண்டனில் வெளியிட்டுள்ளார்கள். சங்கீதம் கற்கும் பிள்ளைகளை தேவாரங்களைப் பண்ணேடு ஓதுவதற்குப் பழகும்படி கூறுவர். சங்கீதத்தில் அப்பியாசம் உள்ள பிள்ளையொன்று தேவாரங்களை முறையாகப் படிக்க முடியாதிருப்பதைக் கண்டு இரங்கி மந்திரங்களைக் (தேவார திருவாசகங்களை) கற்காமல் வெறும் சுரங்களைக் கற்பதால் பயனில்லை என்று கூறினர்.

## சுவாமிகளின் சக்தி

நமது நாட்டில் ஒரு பெரியவர் இருக்கிருரென்ருல் அவர் சோதிடம் சொல்லுவாரா அல்லது நோய் மாற்றுவாரா என்ற கேள்விகள் தான் முதலில் புறப்படும். இவற்றுக்கும் ஞானத்துக்கும் தொடர்பில்லை என்பதை நம்மவர்களில் அநேகர் அறியார். சில பெரியாருக்குச் சித்தியுண்டு. ஆனுல் அவர்கள் வாழ்க்கையில் அவற்றைப் பிரதானமாகக் கருதுவது பிழை. கடையிற்சாமி, செல்லாச்சியம்மா போன்றவர்கள் அநேகருக்கு நோய்களை மாற்றியுள்ளார்கள். ஆனுல் யோக சுவாமிகள் இவற்றில் ஈடுபடுவது கிடையாது. நோயாளிகள் அவரிடம் போனுல் அவர்களைத் தக்க வைத்தியரிடம் போகும்படி சொல்லுவர். எதிர்காலத்தில் நடக்கும் விஷயங்களை அறியும் சக்தி சுவாமிகளுக்கு இருந்தது,

## மேலும் இருவருக்கு கட்டாய ஓய்வு

கொழும்பு, செவ்வாய்

கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த பரீட்சைப் பகுதியில் பணிபுரியும் இருவருக்குக் கட்டாயமாக இளைப்பாறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு உத்தியோகத்தர்களும் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் உறுப்பினர்கள் ஆவர்.

வேறு இயக்கங்கள் உதவி அளித்தாலும் அல்லது அளிக்காவிட்டாலும், ஏற்ற நடவடிக்கை எடுக்க அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் காரியதரிசியாகிய திரு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

கட்டாய ஓய்வுக் கடிதத்தைப் பெறும் உத்தியோகத்தர்கள், அக்கடிதத்தையும் தாம் கொடுத்த விளக்கக்கடிதத்தையும் தமக்கு அனுப்பி வைக்கும்படி திரு. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

## பெற்றோர் தின விழா

மாவிட்டபுரம், புதன்

'அரசாங்கப்பாடசாலைகளைப் பொறுப்பேற்ருலும் பாடசாலை உபகரணங்கள் பற்றாக்குறையைப் போக்க முடியவில்லை. பெற்ருேர்களே பாடசாலை அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டியவர்கள்' என்று வீமன்காமம் ஆங்கில பாடசாலை அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் பாடசாலைப் பெற்ருேர் தின விழாவில் பேசுகையில் கூறினர்.

பண்டிதர் இ. நமசிவாயம், திரு. பொன்னம்பலம் ஆகியோரும் பேசினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

## பொலிஸ் நிலையங்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, செவ்வாய்

கடத்தல்காரர்கள் பற்றியும் பதுக்கல்காரர்கள் பற்றியும், கண்காணிப்பு செய்யுமாறு கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் தலைமைக் காரியாலயம் அறிவித்திருக்கிறது.

## ஈழத்தின் சைவ . . :

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்துள்ளார். இவர் ஞான உபதேசம் பெற்ற தினமாகிய நேற்று (23-3-64) சிவதொண்டன் நிலயத்தில் விசேஷ பூஜைகளும், ஆராதனையும் நடைபெற்றது. சுவாமிகளினது ஆன்மா என்றும் சைவ மக்களுக்கு உறுதுணையாக நின்று நல்வழியில் செல்ல ஊக்குவிக்கும். வளர்க அவரது திருநாமம். வாழ்க அவரது புகழ்.


ஒஸ்டர்மில்க்

குழந்தைகள் அழகாகவும்
ஆரோக்கியமாகவும் திகழ்கிருர்கள்






தாய்பால் ஊட்டமுடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும். ஒஸ்டர்மில்க் திடகாத்திரமான சுகவளர்ச்சிக்கு அவசியமான இறும்புச்சத்தும், விட்டமின் டி யும் கொண்ட சுத்தமான பால் ஆகாரம்.

குழந்தை ஆரோக்கியமாகவும்,திடகாத்திரமாகவும்
வளர்வதைக் கண்டு ஆனந்தமடையுங்கள்

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ–அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.

யாழ்ப்பாண மாவட்ட

# 'பி' பிரிவு பாடசாலைகளின் உடற் பயிற்சி போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டிநேற்றுமுன் தினம்காலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற 'பி' பிரிவு பாடசாலைகளின் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகள் பங்குபற்றின.

'பி'பிரிவு பாடசாலை போட்டி முடிவுகள்:

கனிஷ்ட பிரிவு ஆண்கள்: 1. பெரியபுலம் மெதடிஸ மிஷன், 2. எருதிடல் ஜி. ரி எம். எஸ., 3. நாவந்துறை ஆர். சி., 4. சிறுவிளான் கனகசபை

மத்திய பிரிவு ஆண்கள்: 1. முத்துத்தம்பி வித்தியாசாலை, 2. நாவந்துறை ஆர். சி., 3. இணுவில் சைவமகாஜன, 4 சரசாலை ஸ்ரீ கணேசா.

சிரேஷ்ட பிரிவு ஆண்கள்: 1. மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை, 2. இணுவில் சைவ மகாஜன.

கனிஷ்ட பிரிவு பெண்கள்: 1. அச்சுவேலி சென். திரேசா, 2. பெரியபுலம் எம். எம். 3, பாசையூர் ஆர் சி., 4. மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை.

மத்திய பிரிவு பெண்கள்: 1. முத்துத்தம்பி வித்தியாலயம், 2. பருத்தித்துறை மெசன் தோமஸ் ஆர். சி. 3. அச்சுவேலி சென். திரேசா.

சிரேஷ்ட பிரிவு பெண்கள்: 1. அச்சுவேலி சென். திரேசா, 2. மீசாலை விக்னேஸவரா.

ஏ.கே.எஸ. நகைமாளிகை அளித்த கிண்ணம் பெண்களுக்கான சிரேஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற அச்சுவேலி சென். திரேஸாவிற்கும், மூனீஸ புடவைக் கடை அளித்த கிண்ணம் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற முத்துத்தம்பி வித்தியாலயத்திற்கும் செல்வி ஈ. கே. மதியாபரணத்தின் கிண்ணம், கனிஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற அச்சுவேலி சென். திரேஸாவுக்கும் வழங்கப்பட்டது.

கலைவாணி அச்சகம் அளித்த கிண்ணம் ஆண்களுக்கான சிரேஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்க வித்தியாசாலைக்கும், ஆர். எஸ். சீவரத்தினம் கிண்ணம் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற முத்துத்தம்பி வித்தியாசாலைக்கும், டயனஸ் லிமிட்டெட அளித்த கிண்ணம் கனிஷ்ட பிரிவில் முதலிடம் பெற்ற பெரியபுலம் மெதடிஸ் மிஷனுக்கும் வழங்கபபட்டது.

## கலையரசு பிறந்ததினம்

மானிப்பாய், செவ்

கலையரசு க. சொர்ணலிங்கம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து நாடகக் கலைக்காக புரிந்த அரும்பெரும் சேவைகளைப் பாராட்டு முகமாக அவரது 75-வது பிறந்த தினமான இம்மாதம் 30-ம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணிவரை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் இலங்கைத் தமிழ் நாடகக்குழுத் தலைவர் கலாநிதி க. வித்தியானந்தன் தலைமையில் ஓர் விழா நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

### வெள்ளிக்கிண்ணத்தை கிருஷிகப்பாடசாலை பெற்றது

வவனியா, ஞாயிறு

வவனியா உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நகரசபை உதைபந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

அன்றைய போட்டி கடந்த வருடச் சாம்பியன் கோஷ்டியான கிருஷிகப் பாடசாலைக்கும், சம்பியன் கோஷ்டியில்லாத மற்றைய கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற வீரர்களுக்குமிடையே நடைபெற்றது.

கிருஷிகப் பாடசாலை வீரர்கள், ஒரு சில கோல்போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டதினுல் ஒரு கோலும் போடமுடியாமற் போய்விட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றைய கோஷ்டி மிகவும் திறமையாக விளையாடி மூன்று கோல்களை போட்டுக் கொண்டனர். கிருஷிகப் பாடசாலையைச் சேர்ந்த காப்டன் பர்ஞந்து வவனியாவிலேயே ஒரு சிறந்த விளையாட்டு வீரன் என்ற பெயரை உதைபந்தாட்ட ரசிகர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். கோல்பாதுகாப்பாளர் பசுபதியும் கிருஷிக பாடசாலையில் திறமையாய விளையாடினுர். தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் திரு. பாலசுந்தரம், திரு. கனகசபாபதி ஆகியோர் பாரட்டதக்க முறையில் விளையாடினுர்கள். இப்போட்டிக்குத் திரு. எம். எஸ். ஸ்ரீகாந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

சம்பியன் "மிராண்டாஸ்" வெள்ளிக்கிண்ணத்தைக் கிருஷ்ஷிகப் பாடசாலைக் காப்டன் திரு. பர்ஞந்து பெற்றுக் கொண்டார். இரண்டாவது பரிசுக்குரிய வெற்றிக் கிண்ணத்தை வவனியா யுனைட்டெட் விளையாட்டுக் சழகம் பெற்றுக் கொண்டது.

## கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

வல்வெட்டித்துறை, செவ்.

வட-இலங்கைக் சம்யூனிஸட் வாலிபர் சங்கத்தினரால் ஆண்டுதோறும் நடாததப்படும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இவ்வருடம் கம்பர்மலை "யங்சம்பன்ஸ்" விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறுகின்றது.

இச்சுற்றுப் போட்டியில் யங் சம்பன்ஸ ஏ, பி, கம்பர்மலை கோஷ்டியிடம் வல்வை இ. ஐ வி. க. இ. இ. வி. க., சிவானந்தா, இமையாணன், குணசேகரா, வல்வெட்டி, நவஜீவன்ஸ், நேதாஜி, உடுப்பிட்டி, மனேகரா, அல்வாய், ஆகிய கோஷ்டிகளும் பங்குபற்றுகின்றன.

## நாவலர் இளம் விவசாயிகள் கழகம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வண்ணர்பண்ணை நாவலர் இளம் விவசாயிகள் கழக ஆண்டு முடிவுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. பகபதீஸ்வரன், காரியதரிசி: திரு. அ. ஸ்ரீ ராதா கிருஷ்ணபிரசாத், தனதிகாரி: திரு. ஆ. பாலசுப்பிரமணியம், தொழில் பகுதித் தலைவர்: திரு. க. சண்முகலிங்கம், சமயப்பகுதித் தலைவர்: திரு. நா. சிவநாதன், விளையாட்டுப்பகுதித் தலைவர்: திரு.க.பரமசாமி, ஆசிரியர்கள்: திருவாளர்கள் மு. இராசரத்தினம், வை. செல்வராசா.

# வட இலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

### பரீட்சை ஸ்தானம்- திருக்கோணமலை

**இரண்டாம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: பாலயோகினி ஞானசேகரம், * ராதாமணி பரஞ்சோதிப்பிள்ளை.

**மூன்றும் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வயலின்: சத்தியேஸ்வரி சுப்பிரமணியம், சீதாலட்சுமி விஜயராஜா. வாய்ப்பாட்டு: * சூரியபிரபா விஜயசுந்தரம், * விஜயலட்சுமி சின்னத்தம்பி, * துரைசிங்கம் துரையப்பா.

**நான்காம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வயலின்: * தேவிகாராணி மகேஸ்வரன். வீணை: * ஞானபூங்கோதை சதாசிவம்

**ஐந்தாம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: நேசம்மா துரைராசா.

**ஆசிரியர் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: மணிமேகலாதேவி கார்த்திகேசு

### பரீட்சை ஸ்தானம்- அனுராதபுரம்

**இரண்டாம் பகுதி**

**சாதாரண பிரிவு**

வாய்ப்பாட்டு: சந்திரமலர் அருளானந்தம், வசுந்தரா செல்லத்துரை * திலகவதிதேவி நடராஜா, பூபதி நாராயணன்

### பரீட்சை ஸ்தானம்- மல்லாகம்

**முதலாம் பகுதி**

**2-ம் பிரிவு**

வீணை: * தேவமலர் செல்லையா, * அனுசூயா சிதம்பரநாதன். வாய்ப்பாட்டு:* மங்களேஸ்வரி விநாயகமூர்த்தி, காந்திதாசன் மாணிக்கம், * சந்திரகாந்தன் ஆறுமுகம், * சத்தியமூர்த்தி மாணிக்கம், செல்வராணி சிதம்பரபிள்ளை, கந்தசுவாமி சங்கரப்பிள்ளை, அருணகிரிநாதன் சுப்பிரமணியம். வயலின்: கோபாலகிருஷ்ணன் நடேசசர்மா.

**சாதாரண பிரிவு:**

வயலின்: வில்மா வத்சலா செல்வரத்தினம், * யோகினி தர்மலிங்கம், பவானி நவரத்தினம். வாய்ப்பாட்டு:* ரஜனி நவரத்தினம், * சிவஞானராசா சிற்றம்பலம், கந்தேஸ்வரன் பொன்னம்பலம்.

வாய்ப்பாட்டு:* காமினி வசந்தா செல்வரத்தினம் சிவானந்தராசா சிற்றம்பலம், * இன்பதேவி இராசதுரை, * மாலினி அமரரத்னம், சிவரூபி கதிர்காமதாசன், * யோகேஸ்வரி கந்தையா, * சகுந்தலாதேவி சீனிவாசகம், தர்மசாந்தினி கனகரத்தினம், தவமணிதேவன் அப்புக்குட்டி. குகானந்தசெல்வன் நாகலிங்கம். குகநேசமலர் நாகலிங்கம். ஞானசுந்தரி குமாரகுலசிங்கம், சீதாலட்சுமி இராம ஐயர், ஞானலெட்சுமி, இராம ஐயர், சரோஜினிதேவி வாதலூர், விஜயலட்சுமி விஸ்வநாதன், கேசவமூர்த்தி செத்திவேலு, சிவசோதி கனகசபை. வயலின்: சகுணராணி சிதம்பரப்பிள்ளை. வயலின்:வாய்ப்பாட்டு: யோகசுந்தரி குமாரகுலசிங்கம் ரஞ்ஜினி இராமலிங்கம்.

**இரண்டாம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: * உமாதேவி மாணிக்கசாமி. தனலெட்சுமிதேவி முருகேசு, திலகவதி அப்பையா, திலகேஸ்வரன் அப்புக்குட்டி, சிவானந்தராசா விஸ்வநாதன், ஸ்ரீஸ்கந்தராசா சிற்றம்பலம், நகுலேஸ்வரி சின்னத்தம்பி. வயலின்: * குகராணி நாகலிங்கம். வாய்ப்

**மூன்றும் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: கலாநிதி துரைரத்தினம், இலசஞானவதி கணபதிப்பிள்ளை, தருமவதி செல்லத்துரை, * நீதிமதி செல்லத்துரை.

**நான்காம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வயலின்: திலகவதி வேலுப்பிள்ளை. வாய்ப்பாட்டு: சுபத்திராதேவி கனகசபாபதிக் குருக்கள், பிரேமாவதி தியாகராஜக் குருக்கள்.

**நூனசித்தி:**

வாய்ப்பாட்டு: யோகரத்தினம்முருகேசு.

### பரீட்சைஸ்தானம்- பருத்தித்துறை

**இரண்டாம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வயலின்: ரஞ்சிதபாஸ்கரி கார்த்திகேசு, வாய்ப்பாட்டு: கதிர்மகள் சின்னத்தம்பி.

**மூன்றும் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: யோகரஞ்சிதம் முருகேசு, பிராணேஸ்வர் நடராசா.

**நான்காம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: லலிதாரத்தினம் தெட்சணாமூர்த்தி, விசாகரத்தினம் சி[illegible]ந்துரை, பரமேஸவரி சிவனையா.

**ஐந்தாம் பகுதி**

**சாதாரண பிரிவு:**

வாய்ப்பாட்டு: இந்திராதேவி நாராயணசாமி

சாத்திரப் பரீட்சையில் சித்தியடையவில்லை.

(முற்றும்)

## உபதபாற்கந்தோர் தரத்தை உயர்த்துக

### பட்டினசபை கோரிக்கை

நல்லூர், செவ்.

மாவிட்டபுரம் உப-தபாற்கந்தோர் தரத்தை உயர்த்தித் தரும்படி தபால் இலாகா மேல் அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் காங்கேசன்துறை பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பட்டினசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு மு. திடவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற பொழுது மாவிட்டபுரம் உபதபாற்கந்தோர் தரம் உயர்த்தப்படாமலிருப்பது பொது மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்துவதாகவும் எனவே அதனை 'சி' அந்தஸ்திலிருந்து 'பி' அந்தஸ்துக்கு உயர்த்தும்படி மேலதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதான தீர்மானம் நிறைவேறியது.

பட்டினசபை அரசாங்க மின்சார இலாகாவிடமிருந்து மின்சாரம் பெறுவதனுல் மின்சார மேற்பார்வையாளர் இடத்தை ரத்துச் செய்து ஓர் மின்சார போர்மனை நியமிப்பதனுல் செலவையும் குறைக்கலாமாதலால் அவ்விடத்திற்கு மின்சார போர்மனை நியமனஞ் செய்தல் சிறந்தது என்பது பற்றியும் அதன் மூலம் மின்சார இலாகா செலவினை குறைக்கலாம் என்பது பற்றியும் ஆலோசனை கூறும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## வளர்ந்தோர் கல்விநிலையத்தில் களவு

வட்டுக்கோட்டை, திங்கள்

வட்டுகோட்டை இந்து வாலிபர் சங்கத்தினுல் நடத்தப்படும் வளர்ந்தோர் கல்வி நிலையத்திற்கு அரசினரால் நன்கொடை வழங்கப்பட்ட 'பெற்ரோமாக்ஸ்' விளக்கு ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்களவையொட்டி, சங்கக்காரியதரிசியும் அங்கத்தினரும் பொலிசில் புகார் செய்துள்ளனர்.



# சர்வாதிகார 'திட்டம்' பற்றி டட்லி அச்சம்!

## எம். பி.க்கள் சிலரை வீட்டுக்காவலில் வைக்கும் நோக்கமும் இருந்ததாம்

கொழும்பு, செவ்.

**சில எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் உட்பட தம்மையும், திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவையும் வீட்டுக்காவலில் வைக்கக் கடந்த வாரம் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா, சி. ஐ. டி. பொலிஸாருக்குத் தெரிவித்தாக இன்று வெளியான ஓர் ஆங்கிலப் பத்திரிகை, செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.**

இது சம்பந்தமாக மேலும் கூறப்படுவதாவது:

"இந்த நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியை அமைக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இது ஒன்ருகும்' என்று திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக முழு விசாரணைகள் நடத்தும்படி திரு. டட்லி சேனநாயக்கா சி. ஐ. டி. பொலிஸாரைக் கேட்டுள்ளார். அதுமட்டுமன்றி தற்பொழுதுள்ள மந்திரிசபையில் இருக்கும் சில அங்கத்தவர்களை வெளியேற்றிவிட்டு சில புதியவர்களை மந்திரிகளாக்கச் சிலரினல் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் சம்பந்தமாகக் கிடைத்த சகல தகவல்களையும் சி. ஐ. டி. பொலிஸாரிடம் திரு. டட்லிசேனநாயக்கா தெரிவித்துள்ளாரென தெரியவருகிறது.

நேற்றிரவு கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவுடன் திரு. டட்லி சேனநாயகா நடத்திய பேட்டியில்; தற்பொழுது சி. ஐ. டி. பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டவைகளைத்தான் திரு. டட்லி சேனநாயக்கா கவர்னர் ஜெனரலிடமும் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது."

## பிரதமர் ஸ்ரீமாவை மெத்தானந்தா சந்திப்பார்

### பௌத்தர்களை பல பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளதாம்!

கொழும்பு, செவ்வாய்

**நாட்டில் உருவாகிவரும் அரசியல் நிலைமை பற்றி ஆராயும் பொருட்டு பௌத்த ஜாதிக பலவேகயாவின் தலைவர் திரு. எல். எச். மெத்தானந்தா, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சந்திக்கவிருக்கிருர்.**

இன்று காலை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு திரு. மெத்தானந்தா அனுப்பிய கடிதமொன்றில்; இந்த நாட்டிலுள்ள மக்களை முக்கியமாக பௌத்தர்களை பல நெருக்கடியான, அபாயகரமான பிரச்னைகள் எதிர்நோக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

"பௌத்த ஜாதிக பலவேகயாவின் சார்பிலும் பௌத்த மக்களின் நன்மை கருதியும் உங்களைப் பேட்டிகாண விரும்புகின்றேன் என்றும் தமது கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டு மக்களின் குறிப்பாக பௌத்தர்களின் மனதில் தற்பொழுது இடம்பெற்றிருக்கும் சில தெளிவற்ற கருத்துக்களுக்குத் தீர்வுகாணும்வயில் நான் உங்களைச் சந்திக்கவிரும்புகின்றேன். என்னுடைய இவ் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, என்னுடன் உடனடியாக பேட்டி நடத்த ஒழுங்குகளைச் செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்" என்றும் திரு. மெத்தானந்தா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## உச்சி மகாநாடு கெய்ரோவில் நடைபெறலாம்

கொழும்பு, செவ்வாய்

மண்டல சார்பற்ற நாடுகளின் ஆயத்த மகாநாடு இன்று காலை மீண்டும் நடைபெற்றபொழுது மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தங்களது ஆரம்ப அறிக்கைகளைச் சமர் பித்தனர். மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாடு கெய்ரோவில் நடைபெறவேண்டுமென்று இன்றைய கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமான திட்டவட்டமான முடிவு நாளைய கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

மண்டல சார்பற்ற நாடுகளின் இறுதி மகாநாடு கெய்ரோவில் நடைபெறுமென்று பிரதிநிதிகள் தெரிவித்திருந்த யோசனையை ஐ. அ. குடியரசுப் பிரதிநிதிகள் வரவேற்றனர். இறுதி மகாநாட்டிற்கு அழைக்கப்படும் நாடுக்ள் சம்பந்தமாக இன்றைய மகாநாட்டில் பொதுவான உடன்பாடு ஏற்பட்டது. இறுதி மகாநாட்டிற்கு அழைக்கப்படும் நாடுகள் சம்பந்தமாகச் சிபார்சு செய்யும்பொருட்டு ஒரு உபகமிட்டி நியமிக்கப்படவேண்டுமென்று இன்றைய மகாநாட்டில் யோசனை தெரிவிக்கப்பட்டது. இவ்வுப கமிட்டி சம்பந்தமாக நாளைய கூட்டத்தில் இறுதியான முடிவுசெய்யப்படும்.

### இந்தியா ஆதரிக்காது?

கொழும்பு, செவ்வாய்

நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டைக் கூட்டுமுன்னர், மந்திரிகள் கட்டத்திலான கூட்டத்தை நடத்தும் யோசனையை இந்தியா ஆதரிக்கவோ அல்லது வற்புறுத்தவோ மாட்டாதென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

உச்சி மகாநாட்டைக் கூட்டு முன்னர் மந்திரிகள் கட்டத்திலான கூட்டமொன்றை நடத்த வேண்டுமென்ற யோசனையை யுகோஸ்லேவியா உட்பட சில ஆபிரிக்க-அரபு நாட்டுப் பிரதிநிதிகள் ஆதரிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

## ஞான விளக்கு அணைந்தது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூர்க் கந்தன் தேவாலயத்தின் தேர்முட்டியில் தம்மை மறந்து கங்குல் பகலறத் திருக்காட்சியில் திழைத்து நாள்தோறும் தியானத்தில் இருந்தது அக்காலத்தவர் எல்லோரும் அறிந்ததே. அவர்கள் தேர்முட்டியில் பாடிப்படித்து இறைவனைப் பாராட்டுதலும், பேசொணு ஆனந்தத்தில் சிரிப்பதும் களிப்பதும் தேனிப்பதும், இவர்களின் தெவ்வீகக் களியாட்ட ஒலியைக் கேட்ட குரு எதிர்வளவில் தன் ஆசிரமத்திலிருந்து மகிழ்ந்து சிரித்து மறுமொழி போன்ற பாடல்களைப் பாடுவதும் இக் குருசீட பரம்பரையின் திருவிளையாடல்களெனக் கருதலாம்.

செல்லப்பா சுவாமிகளின் மறைவின் பின் சில சீடர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றதனுல் சுவாமிகள் கொழும்புத் துறையிலுள்ள பிள்ளையார் கோவிலின் தெற்கு வீதியில் உறைவிடம்தேடி பிரமச்சார ஞானியாக வாழ்ந்தார். இவர் அந்தக் காலத்தில் தனது இல்லத்திற்கு அருகிலுள்ள பெரிய வேப்பமரத்தின் வேரடியிலும் அதற்கெதிராயிருந்த தெருவிளக்கின் அருகாமையிலும் தியானத்தில் அமிழ்ந்து தன் உள்ளெழுச்சியின் பயனுக உண்டான திருப்பாடல்களைப் பாடிப்படித்து ஆனந்த பரவசமடைவார். இவரை இங்நிலையில் கண்டு மனங்கசிந்து அடிபணிந்த இளைஞர்ச் சடர்களுள் காலஞ்சென்ற கலைப்புலவர் நவரத்தினம் ஒரு பிரதம அன்படியாராகவிருந்தார். இந்தக் காலத்தில் சுவாமிகள் தம் சினேகிதர்களுடனும், அடியார்களுடனும் நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து தமது உள்ளொளியைப் பரப்பி இந்த நாட்டில் புனித வாழ்க்கைக்கு இறைவனுல் அளித்த ஒரு ஸ்தாபனம் போல் விளங்கினுர்.

சிற்றின்ப வாழ்வில் திருப்தியடையாத எவரும் சாதிமத பேதமின்றி இவரின் அடியார்களாகித் திருவடியைச் சேர்ந்து வாழ்த்தி வணங்கி சுவாமிகளின் பேரின்பச் செந்நெறிகளைத் தாமும் அனுபவிக்க முயன்ருர்கள். சைவப் பெரியார்கள் மாத்திரமின்றி முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் கூட சுவாமிகளின் பேரின்பக் காதலை நாடிவந்து வணங்குவது இந்நாட்டவர்கள் பலர் அறிந்த உண்மை.

சுவாமிகளின் நற்சிந்தனைல்ளும் திருவாக்குகளும் இந்து சமய உண்மைகளை விளக்கியது மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்கள் ஆகியோரின் திருமுறைகளின் பெருவாக்குகளையும் அவரவர்களின் உள்ளம் குளிர சுவாமிகள் விளக்குவார். சாதாரண மடாதிபதிகள் போல் ஞானேபதேசஞ் செய்து சிஷ்யர்களைச் சமய வழிபாட்டில் செலுத்த இவர் முயன்றதில்லை. பழம் பழுத்தால் விழும் என்பதைப் போல துறவறமும் முக்தினிலையடையவேண்டிய காலத்தில் தானே மலர்ந்து இறைவனின் தன்கொடையாக முக்திநிலையையும் சிவானந்தத்தையும் சிவாநுபூதியையும் பெறுவார்கள் என்று எப்பொழுதும் புகட்டுவார்.

சீன தேசத்து பௌத்த ஞானிகள் தியான வழியிலே மௌன நிலையில் நின்று நிர்வான அனுபவத்தைப பெற்று சிஷ்யர்களின் பருவ காலத்தில் குருநோக்கால் எப்படிப் புகட்டுகின்ருர்களோ அவ்வாறே சுவாமிகளும் தர்க்க தத்துவ சாஸ்திரங்களின் உதவிகளைத் தழுவாமல் பக்குவமடைந்தவர்களுக்குதியானத் துணையாகவும் மௌன குருவாகவும் இருந்துவந்தார்.

யோகர் சுவாமிகளின் திருவடிகளை வணங்கிய அன்பர்களும், அடியார்களும் பல்லாயிரம். சுவாமிகளின் தீவிர ஞான வழியைப் பின் பற்றியவர்கள் சிலரே. எல்லோருக்கும் தீபத் தெய்வமாயிருந்த இப்பெரும் குரு சிவபதமடைந்துவிட்டார். இவரது ஞானச் சுடர் என்றும் அணையா விளக்காய் இந்நாட்டவர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உள்ளொளியை மூட்டி சுவாவிக்கச் செய்யும் பெரும் ஒளியாய் இறைவனின் கருணையில் ஓங்கி வளர்க.

### இன்று

வண்ணை வைத்தீஸ்வர சுவாமிகோவில் 17-ம்திருவிழா. இன்று மாலை 6 மணிக்கு அருட்கவி திரு. சி. வினசித்தம்பி "நரியைப் பரியாக்கிய திருவிளையாடல்" பற்றி கதாகாலட்சேபம் நிகழ்த்துவார்.

### மாணவர்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட 'ஏ' பிரிவு பாடசாலைகளின் உடற் பயிற்சிப் போட்டி நேற்று மாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது காலஞ்சென்ற தவயோகி யோகி சுவாமியின் மறைவுக்காக இரண்டு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியில் 3500 மாணவ மாணவிகள் பங்குபற்றினுர்கள்.


கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)

சிவாஜி கணேசன் — விஜயகுமாரி

முத்துராமன் — சௌகார் ஜானகி

மற்றும் பலர் நடிக்கும்



பார் மகளே பார்

பணம், அந்தஸ்து, மதிப்பு இவைதான் வாழ்க்கையின் உயிர்நாடி என்று கருதும் ஜமீன்தாராக நடிகர்திலகமும் அவரது இரு புதல்விகளாக புஷ்பலதாவும் விஜயகுமாரியும் தோன்றுகிறர்கள்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.